ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 40 | துன்மதி ஆண்டு [illegible]த்திங்கள் [illegible]0—8—81 | இதழ் 9



வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்.

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 40	10-8-81	இதழ் 9

உட்பொருள்

எண்		பக்கம்
1	சாதியும் – சமயமும் ...	385
2	தருமைஸ்ரீலஸ்ரீகுருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	390
3	இஸ்லாம் அறிஞர்களுக்கு ஓர் அறிவிப்பு ...	395
4	கோயில் நிலங்களைக் காத்தல் ...	397
5	வலம்புரிஜான் எழுதும் உண்மை நிகழ்ச்சி ...	398
6	திருவிளமர், திருக்கரவீரம் தலச் சிறப்புக்கள் ...	401
7	அபிராமி அந்தாதி ...	405
8	சிவநாமாவளிப் பாடல்	410
9	துளசி (Holy basil) ...	412
10	ஊழும் முயற்சியும் ...	413
11	கவிதை அலைகள் ...	417
12	செய்திகள் ...	422
13	எதிர்காலம் ...	427
14	பார்வையாளர் குறிப்பு நகல்	409, 421, 426
15	மதிப்புரை ...	432

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—[★]—

அன்பர்க் கருள்புரிவ
தல்லாமல் தேவரீர்
வன்பர்க் கருள்புரிய
மாட்டிரேல் — உம்பர்தொழு
நல்லார் புகழ்மதுரை
நாதரே தேவரீர்க்
கெல்லாமும் வல்லசித்த ரேன்?

— சொக்கநாத வெண்பா. 79

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 10
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 12
...சந்தாவெளிநாடு ரூ. 18

ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 40 | துன்மதி - ஆடி - 10—8—81 | இதழ் 9

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

சாதியும் - சமயமும்

நமது கடமை :

இந்தியநாட்டில், குறிப்பாகத் தமிழ்நாட்டில், பெரிதும் பரபரப்பாகப் பேசப்பட்டு வரும் செய்தி அண்மைக்கால மதமாற்றங்கள் பற்றியதேயாகும். இது பற்றிப் பலதரப்பட்டவர்களும் கூறிவரும் கருத்துக்களையும், நாளும் விடுத்து வரும் அறிக்கைகளையும் தொகுத்தால் குழப்பம் மிஞ்சுமே தவிர தெளிவு பிறக்காது. மதமாற்றம் பற்றி உண்மையில் வருந்துவோர்களுக்கு இடையில், 'எரிந்த வீட்டில் இழுத்தவரை இலாபம்' என்பதுபோல், நாத்திக வாதிகள் சிலரும், அரசியல் வாதிகள் சிலரும், சமய வளர்ச்சிக்கு ஊறு விளைத்த சிலரும் நேரடியாகவும், மறைமுகமாகவும் இம் மதமாற்றங்களுக்குக் காரணங்கள் சிலவற்றைக் கூறி வருகின்றன. அரசியல்

இலாபங்களுக்காக எதையும் செய்யத் துணிந்த இவர்களின் கூற்றுக்களுக்கு, விளக்கம்தர முயல்வது ஒருவகையில் தேவையற்ற செயலே. என்றாலும், மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டுள்ள இவர்களது நச்சுக்கருத்துக்களை அகற்றவேண்டிய கடமையும் பொறுப்பும் நமக்கு உண்டு.

ஒரு போலிவாதம் :

சமயமும், சமயத்தலைவர்களும், சமயவாதிகளும்காலங்காலமாகப் பாராட்டிவரும் சாதி பேதங்களே மதமாற்றங்களுக்குக் காரணம் ' என்பது இவர்களது வாதம். இவ்வாதத்தின் உண்மை இன்மைகளைச் சிந்திப்பதில் ஓரளவு விளக்கம் கிடைக்கும் என்றே நம்புகின்றோம். மதம், சமயம், சாதி, இனம் என்றெல்லாம் பல சொற்கள் நம்மிடையே வழங்கி வருகின்றன உயரிய – புனிதக் கொள்கைகளை மதங்கள் என்று சொல்கிறோம். நன்றாக உயிர்களைப் பக்குவப்படுத்துவது என்ற பொருளில் சமயங்கள் என்று அழைக்கிறோம். மக்கள் மேற்கொண்ட தொழில்களின் அடிப்படையில் சாதிகள் உருவாயின என்பர். மொழி மற்றும் பண்பாட்டுக் கூறுகளால் இனங்கள் முகிழ்த்தன என அறிகிறோம். இந்துமதம், பௌத்தமதம் என்பனவும் சைவம், வைஷ்ணவம், சாத்தம் போன்றனவும் மதங்கள் – சமயங்கள் எனப் பேசப்பெறும். வேளாளர், தச்சர், பறையர் என்பன தொழில்பற்றி அமைந்த சாதிகள். தமிழர், தெலுங்கர் என்பன மொழி முதலியனபற்றிவந்த இனங்களாகக்கருதப்பெறுகின்றன.

சிவாலயபூசை முறைகள் :

சைவ – சமயம் நீண்டபெரும்பாரம்பரியம் உடையது. பல ஆயிரம் திருக்கோயில்களைக் கொண்டு விளங்குவது. சைவ – சமயஞ்சார்ந்த வழிபாட்டு நெறிமுறைகளில் பிற்காலத்தே சிறுதெய்வ வழிபாடுகளும் இணைந்தன. காளியம்மன், மாரியம்மன் போன்ற பலவழிபாடுகள் இவ்வகையில்அமைவன, இக்கோயில்களில் பூசைகளை மேற்கொள்வோர் பலதரப்பட்ட சாதியினர். சிவன்கோயில்களில் சிவாசாரியர்கள் பூசைசெய்கின்றனர். இவர்கள் 'பிராமணர்கள்' அல்லர். அநாதிசைவர் சிவபெருமான், அவரைப் பூசிக்கும்பேறுடைய ஆதிசைவர்களே கல்வி, அறிவு ஒழுக்கங்களில் மேம்பட்டசிவாசாரியர்கள். இவர்களை ஆதிசைவர் என்றே முன்னோர் கூறுவர். சில சிவாலயங்களில் 'தேசிகர்கள்' மற்றும் 'பண்டாரங்கள்' எனப்படுவோர் பூசித்து வருகின்றனர். கிராமதேவதைகள் பலவும்

'பூசாரிகள்' என்ற ஒருசில சாதியினரால் பூசிக்கப்பட்டுவருகின்றன. இன்றும் சேரிப்பகுதிகளில் சில கோயில்கள் பள்ளர், வள்ளுவப்பண்டாரம் எனக்கூறப்படும் கூட்டத்தாரால் பூசிக்கப்பட்டு வருகின்றன.

சைவத்தில் கடவுள்நிலை :

சைவத்தில் - சிவவழிபாட்டில் சாதிபேதத்திற்கு இடமில்லை. சாதி உலகியலைப்பற்றியது- உடலைப்பற்றியது, சமயம்ஆன்மிகம் பற்றியது - உயிரைப்பற்றியது. சாதி - தொழில்பற்றியது. சமயம் - ஆசாரமாகிய ஒழுக்கம்பற்றியது. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற வருணத்தார்களோடு, வண்ணார், குயவர், புலையர் வேடர் போன்ற பலரும் அறுபத்துமூன்று நாயன்மார்களாகச் சிவாலயத்தில் எழுந்தருளியிருந்து - நமது வழிபாட்டுக்கு உரியவர்களாகத் திகழ்கிறார்கள். திருக்கோயில் நடைமுறைவழிபாட்டில் பலசாதியார்களும் ஒவ்வோர் பங்கு வகிக்கின்றனர். சிவபிரானே அந்தணனாக வந்தவரலாற்றோடு - புலையனாக எழுந்தருளிவந்த வரலாறுகள் பலவுண்டு. மதுரையில் சிவபிரான்நிகழ்த்தியதிருவிளையாடல்களில், அவன்மீன்பிடிக்கும் வலைஞனாகவும் வருகிறான். விறகு சுமக்கும் தொழிலாளியாகவும் திகழ்கிறான். தேவர்குலத்துத் தெய்வானையைக் கற்புமணம் பூண்ட முருகப்பெருமான் - குறக்குலத்து வள்ளியைக்காதலித்து மணந்ததாக வரலாறுபடைத்தது சைவம்.

சாதிகளை ஒன்றுபடுத்திய சமயம் :

ஒரு அடிப்படையினை, மேல் எழுந்த வாரியாகச் சமயங்களைக் குறை கூறுவோர் புரிந்துகொள்வது இன்றியமையாதது. அமைச்சராக இருந்து கடமையாற்றுதலும் - துப்புரவுத் தொழிலாளியாக இருந்து கடமையாற்றுவதும் தொழில் என்ற அடிப்படையில் ஒன்றே. ஆனால், அமைச்சுத் தொழிலுக்குச் சமுதாயத்தில் இருக்கும் மரியாதை, துப்புரவுத்தொழிலுக்கு இல்லை என்பதனை அனைவரும் அறிவர். சமூகத்தின் இந்தக் கண்ணோட்டமே உயர்சாதி, கீழ் சாதி என்ற பாகுபாட்டுக்கு வித்திட்டதே தவிர சமயத்திற்கும் இப்பகுப்புக்கும் எள்ளளவும் தொடர்பில்லை. சமயங்கள் தெய்வங்களின் பெயரால் அமைந்தவை. சிவனை முழுமுதற் கடவுளாகக்கொண்டு போற்றுவோர் அரசனாயினும், அமைச்சனாயினும், வணிகனாயினும், உழவனாயினும் அனைவரும் சைவர்களே. ஆழமாகச் சொல்லவேண்டுமானால் தொழில் அடிப்படையில் பேதப்பட்டுக்கிடந்த

சாதிகள் நிறைந்த சமூகத்தை நமது முன்னோர் சமயத்தின் அடிப்படையில் ஒன்றுபடுத்தியிருக்கும் அருமைப்பாடு நன்கு விளங்கும்.

எது கொடுமையானது ?

சாதி வேரூன்றி விளைத்துவரும் தீமைகளுக்குச் சமயங்கள் எவ்வகையிலும் பொறுப்பாகமாட்டாது. மனிதனை மதங்களும் – சமயங்களும் 'அபின்' போல மயக்கி ஆட்டிப் படைக்கின்றன எனச் சிலர் பேசிவருகின்றனர். உண்மையில் மக்களை ஆட்டிப் படைப்பவை சாதிகளே அன்றிச் சமயங்கள் அல்ல. ஒரு செய்தியை இங்கே நினைவு கூர்ந்தால் சமயத்தின் நெகிழ்ச்சிப் போக்கும், சாதியின் கொடுமைப்போக்கும் நன்கு விளங்கும். இந்த நாட்டில் பறையர் குடியில் பிறந்த எந்த ஒரு மனிதனும், பார்ப்பனன் ஆக முடியாது. பார்ப்பனக்குடியில் பிறந்த ஒருவனும் இதேபோல் பறையனாகத் தன்னை மாற்றிக்கொள்ள இங்கே வகையே இல்லை. ஆனால், இந்து மதத்தில் பிறந்தவன் விரும்பினால் ஒரே நாளில் இஸ்லாம் மதத்திற்கு மாறலாம். இஸ்லாம் மதத்தினன் விரும்பினால் சிலசடங்குகளை நிறைவேற்றி இந்துவாக மாறலாம். இவற்றை நினைவு கூர்ந்தால் சமயம் நெகிழ்ச்சிப் போக்கு உடையது என்பதும், சாதிகொடுமையான பிடிப்புடையது என்பதும் நன்கு விளங்கும்.

சிவனடியார் நெறிமுறைகள் :

சைவ – சமயத்தின் இறைவன்மட்டுமில்லை; அவன் அருள் பெற்ற அடியார்களும் சாதிபேதங்கள் பார்த்தவர்கள் இல்லை. அந்தணர் திருஞானசம்பந்தர் – பறையர்குலத்துத் திருநீலகண்ட யாழ்ப்பாணரை உயிர்நண்பராகக் கொண்டிருந்தார். அந்தணர் திருநீலநக்கர் – பாணனுர்க்கு அவர் மனைவியாரோடு – தமது இல்லத்தில் வேள்விசெய்யும் இடத்தில் தங்குவதற்கு இடம் கொடுத்தார். புலைக்குலத்து நந்தனரை 'ஐயரே' எனத்தில்லை மூவாயிரவர் விளித்துத் தோளில் தூக்கிக்கொண்டுபோய் நடராச தரிசனம் செய்வித்தார்கள். பெத்தான் சாம்பான் என்பவருக்கு தீட்சிதர்மரபினரான உமாபதிசிவம் தீட்சைசெய்து முத்திகொடுத்தருளினர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் உருத்திர கணிகையர் குலத்து உதித்த பரவையாரைக் காதலித்து மணந்தார் என்றெல்லாம் வழங்கிவரும் சைவசமய வரலாற்றுச் செய்திகள் இச்சமயத்தின், சாதி எல்லைகடந்த பெருந்தன்மைக் குச் சான்றுவன.

அறிஞர் கடன் :

அரசியல் கெடுபிடிகள், சமூகமாற்றங்கள், வேறுசில காரணங்களால் சமயத்தின் உண்மையான நீரோட்டப் போக்கிற்குத் தடை ஏற்பட்டிருக்கலாம். அதனைக்கொண்டு சமயத்தின் சமரசநெறியைச் சந்தேகிப்பது பெரும்பிழை. இன்று ஏற்பட்ட மதமாற்றங்களுக்கு ஒரு சாதியினர் - இன்னொருசாதி யினருக்குக் கொடுத்த அளவற்ற தொல்லைகளே காரணங்க ளாகக் கூறப்படுகின்றன. சாதியின்பெயரால் சலுகைவழங்கி - சாதியின்பெயரால் வேட்பாளர்களை நிறுத்தி - சாதியின்பெயரால் ஓட்டுக்கள் சேகரித்து - சாதிக்கு உயிரூட்டி மக்களைப் பேதப் படுத்தும் கூட்டத்தாரைக் கண்டிக்க இயலாதவர்கள் சமய வாதிகளையும் - சமயத்தலைவர்களையும் கண்டிப்பது அறமாகாது. உண்மையில் சமயம் - சாதிகளைக் கடந்தது. அப்பரடிகள் கூறுவதுபோல் ' அங்கமெலாம் குறைந்து - அழுகு தொழு நோயராய் - ஆவுரித்துத்தின்று உழலும் புலையரேனும் - கங்கை வார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் - அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுள் " என்ற பெருநோக்குப்படைத்தது. எனவே, சமயத்தைக் குறைகூறும் போக்கை விடுத்து உண்மையான மதமாற்றக் காரணங்களைக் கண்டறிந்து களைவதே அறிஞர் கடனாகும் - அரசின் கடமையாகும்.

சென்னை, தருமையாதீனம் சமயப் பிரசார நிலையம்

ஸ்ரீ அப்பர் குருகுல மாணவர்களின் முழுத்தேர்ச்சிநிலை

சென்னை, தருமையாதீனம் சமயப் பிரசார நிலையத்தில் நடைபெற்றுவரும் ஸ்ரீ அப்பர் குருகுலத்தில் தங்கி உணவும் உறையுளும் பெற்று, மாம்பலம் ஸ்ரீ இராமகிருஷ்ண மேல்நிலைப் பள்ளியில் 8, 9, 10, 11 ஆம் வகுப்புக்களில்பயிலும் மாணவர்கள் பதினொருபேரும் முழுமையாகத் தேர்ச்சிபெற்று மேல் வகுப்புக் களுக்குச் சென்றுள்ளனர்.

இக்குருகுலத்தில் பயிலும் மாணவர்களுக்குச் சமயப் பிரசார நிலையத்தில் சமயப் பயிற்சியும் தேவாரப் பண்முறைப் பயிற்சி யும் அளிக்கப்படுகின்றன.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

27—7—81 அன்று நடைபெற்ற

இராமநாதபுரம் இந்து ஒற்றுமை எழுச்சி மாநாட்டில்

தலைமையேற்று வழங்கியருளிய

ஆசியுரை

இன்று இந்து ஒற்றுமை எழுச்சி மாநாடு காலைமுதல் தொடங்கிச் சிறப்பாக நடந்துவருகிறது. அறிஞர் பெருமக்கள் பலர் உணர்ச்சி ததும்பப் பேசியுள்ளனர். ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்பலர் இந்துசமயமக்களிடம் ஒற்றுமையும், விழிப்புணர்ச்சியும் உண்டாகும் வண்ணம் பேருரையாற்றி யுள்ளனர். பல்லாயிரக்கணக்கில் நீங்கள் கூடியிருந்து பாரம்பரியமான நம் இந்து சமயத்தைக் காக்க உறுதியேற்றி ருக்கிறீர்கள். தமிழகத்தின் சைவஆதீனத் தலைவர்களும், ஏனைய இந்துசமயத்தலைவர்களும் ஒன்றுகூடி நம் சமயப்பண்புகளைக் காக்கவும் இன்று நமக்கு ஏற்பட்டுள்ள சோதனைகளை முறியடிக்கவும் உறுதிகொண்டு இங்கேவந்துள்ளனர்.

எந்த ஒரு தீமையைக் களைவதற்கும் அத்தீமை உண்டாவ தற்குரிய காரணத்தை முதலில் நாடி அதனை அகற்ற முயற்சிக்க வேண்டும்.

> " நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல் "

என்கிறார் வள்ளுவர். இருளை அகற்றுவதற்கு முயற்சிப்பதைவிட ஒளியைக் கொண்டுவந்து வளர்ப்பதற்கு முயல்வதுதான் அறிவுடைமை. விளக்கை ஏற்றினால் இருள்தானே அகல்கிறது. நாம் நம் சமயக்கோட்பாடுகளையும் அவற்றின் சிறப்புக்களையும் பயன்களையும் மக்களுக்கு விளக்கிச் சொல்லமுற்பட்டால்

வேற்றுச் சமயங்கள் இந்நாட்டில் தலைகாட்ட முடியுமா? நோய் எப்போது தன் ஆதிக்கத்தைச் செலுத்த முற்படும்? உடலில் தளர்ச்சிவரும்போதுதானே. இளமையும் வலிமையும் மன உறுதியும் உள்ளவரையில் நோயைப்பற்றி அஞ்ச வேண்டாம். நாம் நம் மக்களின் மனச்சோர்வையும் சமயத்தின் பால் மக்கள் கொண்டுள்ள அலட்சியப்போக்கையும் மாற்ற முயற்சிக்கவேண்டும். நம்சமய நெறிகளை மக்களுக்கு எடுத்துக் கூறி இந்துமதத்தினர்க்கு எழுச்சி உண்டாக்கி வீறுபெற்று எழச் செய்யவேண்டும்.

நம் இந்து சமயங்கள் கொள்கைகளினால் உயர்ந்தவை. அவை தம்மைத்தாமே காத்துக்கொள்ளும் வலிமை உள்ளவை. அடிப்படைகள் நன்றாக அமைந்துள்ள நமது சமய நெறிகளை அழிக்க முற்படுவோர் யாவராயினும் அவர்கள் அழிவது திண்ணம். இவ்வுண்மையை வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுகிறது. ஞானசம்பந்தர் நாவுக்கரசர் காலத்தில் சமண பௌத்த மதங்கள் சைவத்தை நிலைகுலைக்க முற்பட்டன. தென்னாட்டின் வடபகுதியிலும் தென்பகுதியிலும் புறச் சமய இருள் சூழ்ந்துகொண்டது. ஆட்சிபலத்தால் பல்லாயிரக் கணக்கான மக்கள் சமண மதம் மாறினர்.

பாண்டியநாட்டில் மங்கையர்க்கரசியாரும்குலச்சிறையாரும் தவிர எல்லோருமே சமணர்களாயினர். என்ன நடந்தது? ஞானசம்பந்தர் சைவசமய இளஞாயிறாய்ப் புறப்பட்டு மதுரை மாநகர் சென்றார். எங்கும் சைவஒளி பரவிற்று. சமண் இருள் அகன்றது. அதுபோலவே தமிழ்நாட்டின் வடபகுதியில் திருநாவுக்கரசருக்குச் சமணர்கள் எத்தனை இடையூறுகள் செய்தனர்? அவரைக் கொல்வதற்குக்கூட முற்பட்டார்கள் அல்லவா? முடிவு என்ன? மக்கள் தாமே மனந்திருந்தினர். சைவத்தின் பெருமையை அறிந்தனர். சமண்பாழிகளையெல்லாம் இடித்துச் சைவக்கோயில் கட்டினர் என்பதைத்தானே நாட்டு வரலாறு நமக்கு அறிவிக்கின்றது. ஆகவே நம் சைவத்தையோ அல்லது வைணவத்தையோ எங்கும் யாராலும் அழிக்க முடியாது? வேற்றுச் சமய மக்களின் எண்ணிக்கையினாலும் நம் சமயம் அழிந்துவிடாது? இருந்தாலும் இத்தகைய பண்டைப்பெருமைகளைஎண்ணி நாம் வாளா இருத்தல்கூடாது. இன்றையநிலையில் நம் சமயங்களைக்காக்க மக்களிடம் மன எழுச்சிதேவை. நமக்குள் ஒற்றுமை மிகமிகத்தேவை. அவற்றை வளர்க்க இத்தகைய மாநாடுகள் துணை புரிவது நிச்சயம்.

இந்து சமய ஒற்றுமை எழுச்சி மாநாடு இராமநாதபுரத்தில் நடப்பது மிக்க பொருத்தமுடையது. இந்தியப் பெருநாட்டு மக்களை ஒன்றாக இணைத்து, தேசிய ஒருமைப்பாட்டுக்கு வழி வகுக்கும் காசி இராமேசுவரப் புனிதயாத்திரையில் இராமேசுவரத்தைத் தன்னகத்தேகொண்டது இம்மாவட்டம். நமது ஆதினக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தரும் ஸ்ரீ ஆண்டாள் அம்மையாரும் அவதரித்த ஸ்ரீவில்லிபுத்தூர் இம்மாவட்டத்தில் தான் உள்ளது. இந்து சமயப் பெருமையை அமெரிக்கநாட்டில் எடுத்துரைத்த நம் விவேகானந்தரை அந்நாட்டுக்கு அனுப்பி வைத்த பெருமைக்குரியவர்கள் இராமநாதபுரம் சேதுபதிகள். தமிழும் சைவமும் தழைத்தினிதோங்க அரசுபுரிந்த சேதுபதிகளின் ஊர் இராமநாதபுரம். இவ்வூரில் இந்து சமய மாநாடு நடப்பது மிக்க இயைபுடைய நிகழ்ச்சியல்லவா? இம்மாநாடு நாம் செய்துவரும் சமயப்பணிகளைத் திரும்பிநோக்கவும் எதிர் காலத்திற்குப் பயன்தரும் திட்டங்களை வகுக்கவும் மிகுதியும் பயன்படும்.

அண்மையில் நெல்லை மாவட்டம் மீனாட்சிபுரத்தில் வாழ்ந்த ஆதித்திராவிட மக்களில் பெரும்பாலோரை இஸ்லாம் மதத்திற்கு மாற்றிய நிகழ்ச்சி நம் இந்து சமயத்திற்கும் கலாச் சாரத்திற்கும் பேரிழப்பாகும். ஹரிஜனமக்கள் இந்துசமயத்தைச் சார்ந்தவர்கள். அவர்களை ஆதித்திராவிடர் என்ற பெயரால் தமிழ்மக்கள் வழங்குவர். ஹரிஜனங்கள் என்பது காந்தியடிகள் வைத்தபெயர்.

ஆதித்திராவிடர்கள் இந்நாட்டின் பழங்குடிமக்கள். மற்றவர்கள் பின்னர் இந்நாட்டில் குடியேறிய மக்களாவர் என்பதை அவர்களின் பெயர்களே உணர்த்தும். இத்தகைய பழங்குடி மக்களில் ஒரு பகுதியினரே நீலகிரியில் வாழும் தொதவர், கல்வராயன்மலையில் வாழும் கொத்தடிமை மக்கள் முதலியோர் ஆவர் இதனை வி. கோ. சூரியநாராயண சாஸ்திரிகள் எழுதியுள்ள தமிழ்மொழி வரலாற்றுல் அறியலாம். நாளடைவில் அவர்கள் வசதிபடைத்தவர்களால் அடிமைகளாய் நடத்தப் பட்டனர். அவர்களும் பறையடித்தல், உழவுசெய்தல், நகரைத் தூய்மைசெய்தல் முதலிய பணிகளைச் செய்து வாழ்ந்தனர். காந்தியடிகள் இவர்களது வறுமைநிலையை உணர்ந்தார். அவர்களைச் சமுதாயத்தோடு இணைத்தார். அவர்களும் கடவுளின் குழந்தைகள்தான் என்ற பொருளில் அரிஜனங்கள் என்று அழைத்தார். தீண்டாமையை ஒழிக்கவும் பாடுபட்டார். இந்துக்களுக்குள்ள உரிமைகளை இவர்களுக்கு வழங்கவேண்டுமென்று

ஏனையோருக்கு உணர்த்தினர் ஆலய வழிபாடுகளில் அவர்களுக்குள்ள உரிமைகளை எடுத்துச் சொல்லி ஹரிஜன ஆலயப் பிரவேசம் முதலியன செய்வித்து ஏனைய இந்துமக்களுக்குச் சமமாகச் செய்தார். ஆதித்திராவிடர்களுக்கு எல்லா உரிமைகளையும்முதலிடம் தந்து உதவிவருகிறத நமது அரசு. கல்வி, உத்தியோகம் முதலியவற்றில் முன்னுரிமை தந்தும், கல்வி மற்றும் தொழில்களுக்கு நிதி உதவியும் அவர்களை முன்னேற்றம் அடையச் செய்துவருகிறது. இன்று இக் குடும்பத்தினர் பல துறைகளிலும் முன்னேறியுள்ளனர். முன்னுக்கு வருகின்றனர்.

முன்னேற்றம் என்பது சமுதாயமும். அரசும் எவ்வளவு உதவினலும் ஒவ்வொரு மனிதனது சொந்த முயற்சியில்தான் பெரும்பாலும்உள்ளது. சிறப்பாக விருதுநகர்ப்பக்கம் பொதுவாக நமதுநாட்டில் நாடார் சமூகத்தினர் தீண்டத்தகாதவர்களாக நூருண்டுகட்குமுன்பு இருந்தனர். அவர்கள் சிறிதுசிறிதாக முயன்று தனிப்பள்ளிக்கூடம் நிறுவி தம் சமூகத்தவர் எல்லோரையும் கல்வி அறிவு ஒழுக்கங்களில் முன்னேற்றி சில பல ஆண்டுகளில் தங்கள் நிலேகளை உயர்த்திக்கொண்டு ஏனைய சமூகத்தினரோடு சமஉரிமைகள் பெற்றனர் என்பதைக் கண்கூடாக அறிகிருேம். இந்தச் சமூகத்தைச்சேர்ந்த பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் நாடுபோற்றும் பெருந்தலைவராய் விளங்கியதை நாம் அறிவோம். இத்தகைய முன்னேற்றமனப்போக்கு ஆதித் திராவிட சமூகத்திற்கு இருக்குமானல் அவர்களும் விரைவில் இந்நாட்டு மக்களோடு பொருளாதாரத்துறையில் சம அந்தஸ்து பெற்றுவிடமுடியும். தீண்டாமையை அறவே அகற்றிவிட முடியும்.

சாதி தொழிலால் வந்தது. தீண்டாமை என்பது ஆசாரங்களால் வந்தது, தூய்மைக் குறையுடையோரைத் தூயவர் விலகி வாழத்தொடங்கிய காரணத்தால் தீண்டாமை என்ற சொல் பிறந்தது. நமது சமயங்கள் விரதங்களாலும் அனுட்டானங்களாலும் மேம்பட்டோரை ஏற்றுக் கொண்டுள்ளன. இந்த வரன்முறைகள் நாமும் தூயராய் வாழ்ந்து மேம்பாடு அடைய வேண்டும் என்ற எண்ணத்தை எல்லோருக்கும் உண்டாக்கும். தூயோரை, பக்தியுடையோரை, நம்சமயம் ஏற்றுக்கொண்டுள்ளது. நாயன்மார்களிலும் ஆழ்வார்களிலும் எல்லாச்சாதியினரும் இருக்கிருர்கள். 'ஆவுரித்துத் தின்றுழலும் புலேயரேனும், கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில் அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே' என்பது நம் அப்பரடிகள் அருளிய தேவாரம். ஹரிசனர்களால் தாழ்ந்தவராகக் கருதப்பெறும்

அருந்ததியார் (சக்கிலியர்) வகுப்பினரும் இந்நாட்டில் வாழ்கின்றனர். நரிக்குறவர்கள் நகரசுத்தித் தொழிலாளர்களில் உள்ள குறவர்கள், இன்னோரன்ன தாழ்த்தப்பட்ட பல்லாயிரவர் வாழ்ந்து வருகின்றனர். இவர்களை நினைவுகூர்ந்தால் மதம்மாற எண்ணும் ஹரிசனங்களின் மனம் மாறும் என்பது உறுதி.

இந்து சமயங்களில் அவரவர்களும் தாங்கள் தாங்கள் மேற்கொண்ட மதக் கொள்கைகளைப் பின்பற்றி வாழலாம். ஒருவர் தான் பிறந்த தாய்ச் சமயத்தை விட்டுவிட்டு மற்ற சமயங்களைச் சார்தல் கூடாது. பெற்ற தாயையும், பிறந்த பொன்னாட்டையும் மறப்பவர்கட்கு மன்னிப்புக்கிடையாது. தாயிடம் குறையிருந்தாலும் தனயன் தாயைப் புறக்கணித்தல் அறமாகாது.

இந்நாட்டில்வந்து குடியேறிய மதங்கள், நம்நாட்டு இந்து சமய மக்களின் அறியாமையையும் வறுமையையும் பயன்படுத்தித் தங்கள் சமயங்களை வளர்க்க முயற்சிசெய்து வருகின்றன. மக்கள் தங்கள் சமயங்களில் உள்ள வெறுப்பினாலோ பிற சமயங்களிடம் உள்ள கவர்ச்சியினாலோ மதம் மாறவில்லை. பொருளாதாரம் பிற வசதிகளைத் தேடி மதம் மாறுகின்றனர். இந்நிலையை நீடிக்கவிட்டால் நாட்டுக்கே ஆபத்துவந்துசேரும். இதை அரசும் விழிப்பாகஆராய்ந்துவருகிறது. ஏனையமதத்தினர் இதுவரை சகோதர மனப்பான்மையுடன் இந்து சமய மக்களோடுபழகிவந்தனர். வருகின்றனர். மறைமுகமாகஇந்துக்களில் உள்ள எட்டப்பர்களைத்தூண்டித் தங்கள் சமயத்துக்கு ஒட்டுமொத்தமாக மக்களை மதம்மாற்றுவதால் தங்கள் நட்புரிமையை அவர்கள் இழக்கநேரிடும். இதனை இஸ்லாமியர்கள் அவர்களுக்குள் உள்ள எட்டப்பர்களை எச்சரித்து இந்துக்களுடன் என்றும் சகோதரர்களாக வாழ முயற்சித்தல் இருபாலாருக்கும் நலம் பயக்கும். நம்மக்களும் பணத்துக்கும் பதவிகட்கும் தங்களை அடிமைப்படுத்திக்கொள்ளக்கூடாது.

இஸ்லாமியரும் கிறித்தவர்களும் இந்துக்களிடம் நம்பிக்கையுடையவர்களாயும் நட்புடையவர்களாயும் இதுவரை பழகிவந்ததுபோல இனியும் பழகி அன்புகொண்டு வாழவேண்டும். இந்துக்கள் தங்கள் நாட்டின் – சமயத்தின் பெருமைகளைப் போற்றிக் காத்து வாழவேண்டும், இந்நிலையே இந்துமுஸ்லீம் ஒற்றுமைக்கு வழிவகுக்கும் இணைந்துவாழ்வோம்; என்றும் இன்பம் பெருக வாழ்வோம். எல்லோரும் நலம்பல பெற்று நீடுவாழ ஆலவாய்ச் செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திப்போமாக.

———

இஸ்லாம் அறிஞர்களுக்கு ஓர் அறிவிப்பு

இந்தியாவாகிய நம் தாய்நாட்டில் எல்லா மதஸ்தர்களும் ஐக்யபாவனையில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கிடையில் பண்பாட்டின் சமரசமும் அமைதியாக நிகழ்ந்து வருகிறது. கொள்கையை அனுசரித்து இந்நாட்டில் முறையாக மதம் மாறுதலுக்கும் அனுமதி உண்டு. ஆனால் இந்த அனுமதி வேறு எந்த இஸ்லாமிய நாட்டிலும் கிடையாது. இஸ்லாமிய மதத்தினின்றும் வேறு மதத்துக்கு மாற்ற முயலுபவனும், மாறிப்போகிறவனும் அப்போதைக்கப்போதே பாகிஸ்தானத்தில் கொல்லப்படுவார்கள். பிழைப்புக்காக அராபி நாட்டிற்குச் சென்றிருக்கிற ஹிந்துக்கள் அங்கு ஐயப்பன் கோயில் ஒன்றை அண்மையில்கட்டி எழுப்பினார்கள். இஸ்லாமிய நாட்டில் ஏனைய மதங்களுக்கு உற்ற ஆலயத்துக்கு ஆங்கு இடமில்லை யென்று அக்கோயில் உடனடியாகப் புல்டோசர்கொண்டு தரை மட்டமாக்கப்பட்டது. அதுவே இஸ்லாமிய மதவெறிபிடித்து உள்ள புற நாட்டவர்களுடைய போக்கு ஆகும். பொதுப்பட இஸ்லாமியர்கள் மதவெறி பிடித்தவர்கள். பரந்த மனம் படைத்திருப்பவர் மிகச் சிலர்.

சமத்துவமும், சகோதர பாவனையும் இஸ்லாம் மதத்தில் ஆழ்ந்து அனுஷ்டிக்கப்படுகின்றன என்னும் கொள்கை பலர்க்கிடையில் நிலவி வருகிறது. ஆனால் அது உண்மையன்று. அல்லாவின் வழிபாட்டின் பொழுதுதான் அவர்களுக்கிடையில் சமத்துவத்தைக்காணலாம். அத்தகைய சமத்துவம் ஒரு புறம் இருக்கத் திருட்டுப் புரட்டுச் செய்கின்ற குற்றவாளிகளுடைய கண்ணைப் பிடுங்குதலும், கை கால்களை வெட்டுதலுமாகிய காட்டுமிராண்டித் தனத்திற்கு அவர்களுடைய மதம் இடம் தருகிறது. இது பாராட்டத்தக்கதன்று. நாகரீகம் வாய்ந்த வேறு எந்த மதமும் இதற்கு ஆதரவு தராது. அரசியல்துறையில் தந்தையைக் கொன்று மகன் சிம்மாசனம் ஏறுவது உலகெங்குமுள்ள முஸ்லீம் ஆட்சியின் பழக்க வழக்கமாம். கூட்டில் பறவைகளை அடைத்து வைத்திருப்பது போன்று பெண்கள் பலரை வீட்டில் மனைவிமார்களாக அடைத்து வைத்திருந்து

தங்களுக்கு விருப்பம் இல்லாதபொழுது 'தளக்கு' என்று சொல்லி அவர்களை விரட்டியோட்டுவதும் அநாகரீகமான பழக்கமாம். படையெடுத்துச் செல்லும் இஸ்லாமியர்கள் விலங்குகள் போன்று பெண்களைத் தாக்குவது தங்கள் செயல் என்பதை அண்மையில் கீழ் வங்காளத்தில் நிருபித்துக் காட்டினர்கள். தமிழ் நாட்டில் ராவுத்தர் என்னும் பெயர் பெற்றுள்ள முஸ்லீம்கள் இன்றைக்குப் பாகிஸ்தானத்திற்குள் சென்றால் அணுகத் தகுதியற்றவர்கள் என்று அவர்கள் விரட்டி யோட்டப் படுவார்கள். இதுவே இஸ்லாமியப் பண்பு.

அண்மையில் திருநெல்வேலி மாவட்டத்தில் மீனட்சி புரத்தில் ஹிந்து மதத்தைச் சேர்ந்த பலபேர்திட்டமிட்டுத் தாராளமாகக் கைக்கூலி கொடுத்து இஸ்லாமிய மதத்தில் சேர்க்கப்பட்டு இருக்கிறர்கள். இதற்குத் தாராளமாகப் பண உதவி இஸ்லாமிய நாடுகளிலிருந்து வருகிறது எனத் தெரிய வருகிறது. இம்முயற்சிக்கு இணக்கம் தருகிறஇந்தியமுஸ்லீம்கள் தாய் நாட்டுக்குத் துரோகிகள் ஆவார்கள். ஏனைய நாடுகளுக்கு ஐந்தாம்படை ஆவார்கள்.

இத்தகைய பொருந்தாத இயக்கம் மறைமுகமாகத் தமிழ் நாட்டில் பரவிவருகிறது. இதை எதிர்த்து ஹிந்துமக்களுக் கிடையில் கிளர்ச்சி வடிவெடுத்து வருகிறது. இதன் விளைவாக ஹிந்து இஸ்லாமிய ஒற்றுமை குலைந்துபோய் வேற்றுமையும், வெறுப்பும் வடிவெடுக்கும். தீராக் கோபம் போராய் முடியும். அதன் விளைவாக அமைதியாக வாழ்ந்துவரும் முஸ்லீம்களும் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். எனவே இந்த நிலைகுலைவின் கண் அறிஞர்களாயிருக்கும் இஸ்லாமியர்கள் கருத்தைச் செலுத்தி இந்தப் பொருந்தாத செயலைத் தடுக்கத் தீவிரமாக முயல்வார்களாக. இல்லையேல் இஸ்லாமியர்கள் தங்களுக்குத் தாங்களே தேடிக்கொள்ளும் கஷ்ட தசைக்குத் தாங்களே பொறுப்பாளி ஆவார்கள். ஹிந்து சமுதாயம் இது விஷயத்தில் குமுறிக் கொண்டிருக்கிறது. சண்டை சச்சரவு வலுப்பதற்கு முன்பே சரியான முறையில் அணைபோட்டு இதைத் தடுக்க இஸ்லாமிய அறிஞர்கள் கடமைப்பட்டிருக்கிறர்கள்.

நன்றி

தர்மசக்கரம் – சக்கரம் – 30. பக்கம் 316

கோயில நிலங்களைக் காத்தல்

தருமையாதீனப்புலவர், செஞ்சொற் கொண்டல், தமிழாகரர்,

டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ , பிஎச். டி.

(தமிழ்ப்பேராசிரியர். அ, வ. அ. கல்லூரி, மாயூரம்)

கோயில் வழிபாடு கோணுமற் செய்தற்கே
மேவுநிலம் தந்தார் மிக. (1)

தம்வாழ்விற் காகத் தருநிலங்கள் பேணிடுதல்
வம்பன்றே? சீர்மை வழங்கு! (2)

குத்தகைக்குக் கொண்டீர்; குறையா வருவாயை
எத்திறத்துக் கொண்டீர், இனி? (3)

முன்னவனர் கோயில் வழிபாடு, முட்டின்றி
நன்னயங்கள் கொண்டிடவே, நாடு! (4)

பங்கை யளிப்பீர்! பரம்பொருளின் போற்றுதலில்
உங்களுக்கும் உள்ளமில்லை யோ? (5)

கோயில் நிலத்தை அயலார்க் குரித்தாக்க
ஏவினதார்? காண்க, இருந்து! (6)

அரசு தலையிடுக! அன்புநெறி பூண்க!
பரவிடவே காண்க பரிவு! (7)

விழுந்திருக்கும் கோயில் விழாக்கொள்ள ஆங்கே
தொழுதிருக்கச் செய்கை துலக்கு! (8)

திருக்கோயிற் சொத்தைத் தமதாக்கும் தீயோர்
ஒறுக்கப் பெறலே உயர்வு! (9)

அறநிலையம் காக்க! அரும்பொருளைப் பொல்லார்
உறக்கவர்தல் தீர்க்க ஒழித்து. (10)

[—"புதுமைக்குறள்"–நூலின் 40 ஆவது அதிகாரம்]

வலம்புரிஜான்

எழுதும் உண்மை நிகழ்ச்சி

ஓடக்காரன் வடக்கு நோக்கி துடுப்பைப் போடுகிறபோது, அதிலே பயணம் பண்ணுகிற நான் மாத்திரம் தெற்கு நோக்கித் திரும்பி வர முடியாது. ஒப்புக்காகச் சொல்லிக் கொண்டிருந்த உதவாக்கரை விவகாரங்களிலிருந்து இப்போது நான் விடுதலை பெற்றிருக்கிறேன். என் கால்களில் இன்னமும் சங்கிலிகள் இருக்கலாம், சிறகுகள் இலகுவாகிவிட்டன. பார்க்க முடியாத ஒன்றை – தொட்டு உணர முடியாத ஒன்றை – நான் எப்படி நம்புவது என்றுதான் அம்புலி மாமா காலத்தில் நானும் சொல்லிக் கொண்டிருந்தேன். இப்போது அறுபது வயதிலும் அதையே சொல்லிக் கொண்டிருப்பவர்களைப் பார்த்தால் எனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

வேளாங்கண்ணியில் தொடங்கிய 'அம்மா அழைப்பு' என்கிற பதிகத்தைப் பாடி முடிப்பதற்காகப் போன வருஷம் கொல்லூர் மூகாம்பிகை கோயிலுக்குப் போனேன். என் மனையாளும் மகனும் கூடவே வந்தார்கள். பெங்களூரில் மஹாலட்சுமி லே – அவுட்டில் மூகாம்பிகை பக்த மண்டலி என்றிருக்கிறது. அங்கே நாயக் என்று ஒருவர். பேர் வாய்ந்த இன்ஜினியராக இருந்தவர். இப்போது எல்லாவற்றையும் விட்டு விட்டார். அம்பாள் அவர் மீது பிரத்யட்சமாகிற போது அவர் சொல்லுவதெல்லாம் பலிக்கிறதென்று கேள்விப்பட்டேன். பெங்களூர் நண்பர்கள் என்னை அவரிடம் அழைத்துச் சென்றார்கள். அந்த நேரம் வந்தது. அவர் சொன்னவைகள் ஈர நதியின் பிரவாகத்தைப்

போல இப்போதும் எனது
நெஞ்சில் ஓர் அழகோடு
நடந்து
கொண்டிருக்கின்றன. " நீ
இவைகளை நம்புவதற்காக
ஒரு அடையாளம்
சொல்லுகிறேன்," என்று
சொல்லிவிட்டு,
"கொல்லூர் மூகாம்பிகை
கோயிலிலிருந்து நீ
திரும்புகிற போது
'காளிங்கன்' என்கிற
சர்ப்பம் உனக்கு
எதிர்ப்படும்," என்கிற
அருள் வாக்கு வந்தது.
கோயிலுக்குச் சென்றேன்.
மூர்த்தி கணேஷ்பட்
என்கிற புரோகிதரின்
வீட்டில் இரண்டு நாட்கள்
தங்கியிருந்தோம்.
அபரணைக் கரையில்
பதிகமும் முடிந்தது. ஊர்
திரும்புகிற நேரம்.
பஸ் நகர்ந்து கொஞ்ச
நேரம். என் துணைவி
கேட்டாள் – " சர்ப்பம்
தென்படும்
என்றீர்களே... "
ஒரே ஒரு நிமிடம் –
இப்போதும் உடல்
குலுங்கிப் போகிறது.
வலது புறத்திலிருந்து
இடது புறமாகக் கருப்பு
வெல்வெட் நிறத்தில், ஆள்
உயரத்திற்கு ஒரு சர்ப்பம்
தலையைத் தூக்கி அருள்
வழங்குவது போல் படம்
காட்டியது. பஸ்ஸை
நிறுத்தி அனைவரும் கீழே
விழுந்து வணங்கினர்.
சொன்னது நடந்தது;
நடக்கிறது; நடக்கும்.
சுவாசிக்கிற காற்றே
சொந்தமில்லை
என்கிறபோது அம்பாளைச்
சரணடைந்து தானே
தீரவேண்டும?
அன்றிலிருந்து அம்பாளின்
மீது பிரேமை உண்டானது
மாத்திரமல்ல. வீரமணி
மீது தணியாத கோபம்
உண்டானது.

நன்றி — குமுதம்

எந்த ஒரு மனிதனையும் முழுமையாக யாரும் புரிந்துகொள்ள முடியாது. அதேபோல் எந்தக் கலையையும் யாரும் முழுமையாகத் தெரிந்துகொள்ள முடியாது.

பிரதமர், **இந்திரா காந்தி.**

23—7—81, — தினமலர்.

அட்டைப்படம்

ஓலமிட்ட விநாயகர்

விநாயகர் குழந்தைகள்முதல் பெரியோர்வரை எல்லோரா லும் பக்தியோடு வழிபடப்பெறும் தெய்வமாவார். சிவபெருமா னுடைய புதல்வர்கள் நால்வரில் இவரே முதன்மையானவராத லின் பிள்ளையார் என்ற சிறப்புப்பெயராலும் தன்னைவழிபடுபவர் களின் இடையூறுகளைக் கடிபவராதலின் விக்னேசுவரர் எனவும் சிவகணங்கட்குத் தலைவராய் விளங்குதலின் கணபதி எனவும் இவர் வழங்கப்பெறுகிறார். ஓம் என்ற பிரணவமேஇவரதுவடிவர். பெருவயிறும் ஒற்றைக்கொம்புமுடையவர். இவருக்குக்கரங்கள் ஐந்து. பின்னிரண்டு கைகளில் இருப்பன அங்குசபாசங்கள். சித்தி, புத்தி, வல்லபை என மூன்று சக்திகள் இவருக்குள்ளனர். பல தலங்களிலும் பல்வேறுபெயர்களோடு விளங்கும் இவர் திருவையாற்றில் ஓலமிட்டவிநாயகர் என வழங்கப்படுகிறார். சுந்தரர் சேரமான் பெருமாள் நாயனாரோடு திருவையாறு சென்ற போது காவிரியில் வெள்ளம் கரைபுரண்டோடியது. தென் கரையில் நின்றவாறு சுந்தரர் ஐயாற்றிறைவனை வணங்கிப் 'பரவும் பரிசொன்று' பாடலை முதலாகக் கொண்ட திருப்பதிகம் பாடியருளினார். இவ் விநாயகர் காவிரி வெள்ளம் சுந்தரருக்கு வழிவிடுமாறு செய்து ஓலமிட்டு அவரை அழைத்தார் ஆதலின் திருவையாற்றிலுள்ள விநாயகர் ஓலமிட்டவிநாயகர் என வழங் கப்பெறுகிறார். 2—9—81 விநாயகசதுர்த்தியை முன்னிட்டு ஞான சம்பந்தம் ஓலமிட்டவிநாயகர் திருவுருத்தாங்கி வருகிறது.

மதமாற்றம்பற்றி அம்பேத்கார் அறிக்கை

இந்தியசர்க்கார் சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்கார் விடுத் துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருப்பதாவது :-

இந்தியாவிலுள்ள ஷெட்யூல்ட் வகுப்பினரின் வருங்காலம் கவலைதரக்கூடியதாக இருப்பினும் உங்களுக்குகிடைக்கக்கூடிய வசதிகளைக்கொண்டு இந்தியாவுக்கு வந்துவிடுங்கள் என்று, பாகிஸ்தானில் சிக்கிக்கொண்டிருக்கும் ஷெட்யூல்ட் வகுப்பின ரைக் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொருவிஷயமும் கூற விரும்புகிறேன். பாகிஸ்தானிலும் சரி, ஹைதராபாத்திலும்சரி, ஷெட்யூல்ட்வகுப்பினர்கள் முஸ்லீம் களையோ அல்லது முஸ்லீம்லீகையோ நம்பக்கூடாது. ஹிந்துக் களைத் தாங்கள் விரும்பாததால் முஸ்லீம்களைத் தங்கள் நண்பர் களாக மதிப்பது ஷெட்யூல்ட் வகுப்பினருக்கு வழக்கமாகி விட்டது. இது தவறு.

இஸ்லாத்துக்கு மதம்மாற்றப்படுவதற்குப்பணியவேண்டாம் என்று ஷெட்யூல்ட் வகுப்பினரை வேண்டிக் கேட்டுக்கொள்ளு கிறேன். பலாத்காரத்தில் மதம்மாற்றப்பட்டவர்கள், இனி தங் கள் பழைய மதத்திற்குத் திரும்பமுடியாதென்று எண்ணவேண் டாம். மதம் மாற்றப்பட்டவர்கள் மீண்டும் திரும்பவிரும்பினால் அவர்கள் வரவேற்கப்படுவார்கள் என்று உறுதிமொழி கூற விரும்புகிறேன். 2—8—1947. நன்றி. –துக்ளக் 15—8—81.

திருவிளமர், திருக்கரவீரம் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி,

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

1. திருவிளமர்

திருவிளமர், தஞ்சைமாவட்டத்தில் திருவாரூர் தாலூகாவில் திருவாரூருக்குத் தென்மேற்கே மூன்று கிலோமீட்டர் தூரத்தில் திருவாரூரிலிருந்து ஓடம்போக்கியாற்றின் தென்கரை வழியே தஞ்சை செல்லும் பேருந்துச்சாலையில் உள்ளது. திருவாரூரிலிருந்து பேருந்துகளில் செல்லலாம்.

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 90 ஆவது தலம். திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகம் ஒன்றுள்ளது. மற்றும் திருஞானசம்பந்தர் தேவாரம் 2-39-5. திருநாவுக்கரசர் தேவாரத்தில் 6-7-7; 6-70-6, சுந்தரர் தேவாரம் 7-47-6 ஆகிய திருப்பாடல்களிலும் இத்தலப் பெயர் குறிக்கப் பெற்றுள்ளது.

தெண்ணீர்ப் புனற்கெடில வீரட்டமுஞ்
சீகாழி வல்லந் திருவேட்டியும்
உண்ணீரார் ஏடகமும் ஊறல் அம்பர்
உறையூர் நறையூர் அரண நல்லூர்
விண்ணுர் விடையார் விளமர் வெண்ணி
மீயச்சூர் வீழி மிழலை மிக்க
கண்ணுர் நுதலார் கரபுரம்முங்
காபாலி யாரவர்தங் காப்புக்களே.

— திருநாவுக்கரசு சுவாமிகள்.

தாங்கூர் பிணிநின் னடியார் மேல அகல அருளாயே
வேங்கூர் உறைவாய் விளமர் நகராய் விடையார் கொடியானே

நாங்கூர் உறைவாய் தேங்கூர் நகராய் நல்லூர் நம்பானே
பாங்கூர் பலிதேர் பரனே பரமா பழனப் பதியானே.

— சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

கோயிலமைப்பு :

திருவிளமர் அழகிய சிறிய கிராமம். கோயில் ஓடம்போக்கி யாற்றின் தென்கரையில் உள்ளது. சிறியகோயில். திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி திருக்கோயிலின் துணைக்கோயிலாக நிர்வகிக்கப்படுகிறது. கோயிலுக்கு எதிரே அக்கினி தீர்த்தம் உள்ளது. கிழக்குநோக்கிய சந்நிதி. இரண்டு பிராகாரங்கள் உள்ளன. கோபுர வாயிலின் இருபுறங்களிலும் விநாயகர், முருகன் எழுந்தருளியுள்ளனர். வாயிலைக்கடந்தவுடன் நந்தி பலிபீடங்கள். வெளிப்பிராகாரம திருநந்தவனமாகப் பயன் படுகிறது. இரண்டாவது கோபுரவாயிலைக் கடந்து உள்ளே செல்வோம்.

கிழக்குப்பிராகாரத்தில் கோபுரவாயிலின் வடக்கே பைரவர் தனிக்கோயிலில் தெற்குநோக்கி விளங்குகின்றார். மேற்குப் பிராகாரத்தில் கன்னிமூலையில் இத்தல விநாயகரும், நடுவே கஜலக்ஷ்மியும், அடுத்து முருகப்பெருமானும் எழுந்தருளியுள் ளனர். வடக்குப் பிராகாரத்தில் சண்டேசுவரர் திருக்கோயில் உள்ளது. கோஷ்டங்களில் தெற்கே தக்ஷிணாமூர்த்தியும், மேற்கே மகாவிஷ்ணுவும், வடக்கே பிர்மாவும் துர்க்கையும் விளங்குகின்றனர். முன்மண்டபம் சுவாமி அம்பாள் சந்நிதிகளை இணைத்து விளங்குகின்றது. இம்மண்டபத்தில் ஈசானத்திசை யில்பதஞ்சலி முனிவர் சூரியன் புலிக்கால் முனிவர் உருவங்கள் உள்ளன. மகாமண்டபத்தில் நந்தி பலிபீடங்கள் உள்ளன. சுவாமி சந்நிதி மிக்க கவர்ச்சியோடு காணப்படுகிறது. அம்பாள் தெற்குநோக்கி எழுந்தருளியுள்ளார். அருள் நலம்பழுத்த இவ் வம்பிகை பலரதுபிரார்த்தனைகளையும் ஈடேற்றவல்லதெய்வமாக இருத்தலால் சந்நிதியில் அன்பர்களின் காணிக்கையாகவந்த பிரார்த்தனைப்பொருள்கள் காணப்படுகின்றன.

மூர்த்திகள் :

இறைவன் திருப்பெயர் அருள்மிகு பதஞ்சலிமனோகரர். இறைவியாரின் திருப்பெயர் அருள்மிகு யாழினும்மென்மொழி யம்மை. திருவுலாமூர்த்திகள் பாதுகாப்பின்பொருட்டு வேறு கோயில்களில் வைக்கப்பெற்றுள்ளன. தீர்த்தம் – அக்கினி தீர்த்தம்; சந்நிதியில் உள்ளது.

திருவாரூரில் நடைபெறும் மார்கழித் திருவாதிரைத் திருவிழாவிற்கும், பங்குனி உத்திரத் திருவிழாவிற்கும் பதஞ்சலி முனிவர் எழுந்தருளித் தியாகேசரை வழிபடும் ஐதிக விழா நடைபெறுகிறது.

2. திருக்கரவீரம்

இத்தலம் தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் தாலுகாவில் திருவாரூருக்கு மேற்கே 11 கி. மீ. தூரத்தில் திருவாரூரிலிருந்து கும்பகோணம் செல்லும் பேருந்துச்சாலையில் உள்ளது. ஊர் கரையபுரம் என வழங்கப்படுகின்றது. வெட்டாற்றின் தென் கரையில் திருவாரூரிலிருந்து கும்பகோணம் செல்லும் பேருந்துகளில் வடகண்டம் என்ற ஊருக்கு அருகில் கரையபுரம் என்று கேட்டுத் திருக்கோயிலுக்கு அருகில் இறங்கலாம். திருக்கரவீரம் என்றே ஊர்ப் பெயரைக் குறிப்பிட்டும் பேருந்துப்பலகையிலும் அவ்வாறே குறிப்பிட்டும் வழங்கினுல் ஊர் விளக்கமுறும்.

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 91 ஆவது தலம். திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகம் ஒன்றைப்பெற்றது. திருநாவுக்கரசர் தேவாரம் 6-7-10, 6-51-6, 6-70-4 ஆகிய திருப்பதிகப்பாடல்களில் இத்தலத்தைக் குறிப்பிட்டருளியுள்ளார்.

சிந்தும் புனற்கெடில வீரட்டமும்
திருவாஞ் சியமும் திருநள் ளாறும்
அந்தண் பொழில்புடைசூழ் அயோகந்தியும்
ஆக்கூரும் ஆவூரும் ஆன்பட்டியும்
எந்தம் பெருமாற் கிடமாவதாம்
இடைச்சுரமும் எந்தை தலைச்சங் காடும்
கந்தங் கமழுங் கரவீரமும்
கடம்பூர்க் கரக்கோயில் காப்புக்களே.

கரவீரம் என்பதற்குப் பொன்னலரி என்பதுபொருள் அலரியைத் தலமரமாகக்கொண்ட இத்தலம் கரவீரம் எனப்படுகிறது. கௌதமர் பூசித்ததலம்.

கோயிலமைப்பு :

இக்கோயில் திருக்கண்ணமங்கை பெருமாள் கோயிலோடு இணைக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது. வடகண்டம் என்ற

ஊரையடுத்துள்ள கரையபுரம் சிறியகிராமம். கோயில்பெரியது. விமானங்கள் உயரமானவை. சிவலிங்கப்பெருமான் பெரிய திருவுருவத்தோடு காட்சிதருகிருர். கோயில் கிழக்குநோக்கி உள்ளது. சந்நிதியில் பிரமதீர்த்தம் உள்ளது. கோபுரவாயிலைக் கடந்தவுடன் நந்தி பலிபீடங்களைத் தரிசிக்கலாம். அம்பாள் சுவாமியின் வலப்பாகத்தே திருமணக்கோலத்தில் விளங்கு கின்ருர். சுவாமி அம்பாள் கோயில்களை இணைத்துள்ள பெரிய பிராகாரத்தை வலம்வரலாம்.

மேற்கே தலவிநாயகரும், முருகனும் விளங்குகின்றனர். வடக்கே சண்டேசர்கோயில் உள்ளது. கிழக்கே சூரிய சந்திரர்கள் சனிபகவான் பைரவர் உள்ளனர். சுவாமிகோயில் முன்மண்டபம் மகாமண்டபம் அர்த்தமண்டபம் முதலிய வற்ருேடு அழகுற அமைந்துள்ளது. மகாமண்டபத்தில் நந்தி பலிபீடங்களைத்தரிசித்து அருள்மிகு கரவீரநாதரை வழிபடு வோம். அம்பாள் கோயிலின் வாயிலில் தலப்பதிகக்கல்வெட்டு பதிக்கப்பட்டுள்ளது. சமயாசாரியர் எழுந்தருளியுள்ளனர். அம்பாள் பெரிய திருவுருவத்தோடு காட்சிதந்து நம் மனத்தைப் பிணிக்கிருர். சுவாமிகோயில் கோஷ்டங்களில் தெற்கே தஷிணு மூர்த்தியும், மேற்கே மகாவிஷ்ணுவும், வடக்கே பிர்மாவும் விளங்குகின்றனர். சுவாமி அம்பாள் விமானங்கள் உயர மானவை. திருப்பணி நடந்துவருகிறது.

மூர்த்திகள் :— இறைவன்திருப்பெயர் அருள்மிகு கரவீர நாதர். இறைவி திருப்பெயர் அருள்மிகு பிரத்தியட்சமின் னம்மை. தலமரம்:- அலரி. தீர்த்தம் :- அனவரததீர்த்தம்.

இறைவன் சந்நிதியிலிருந்து 25. கி. மீ. தூரத்தில் உள்ள கடற்கரைவரை ஊர்களோ வீடுகளோ இல்லை என்றும், இவ் வழியே கடலில் தோன்றிய நஞ்சை கரவீரநாதர் எடுத்துவரச் செய்து உண்டார் என்றும் விடம் வந்தடைந்தவழி வெற்றிட மாக உள்ளதென்றும் கூறுகின்றனர்.

இத்தலத்திலுள்ள நடராசர் திருவுருவம் அழகும் மிக்க விலைமதிப்பும் உடையது. நடராசர் எழுந்தருளும் மண்டபம் செங்கல்லினுல் மிக்கவேலைப்பாடுகளோடு செய்விக்கப் பெற்றுள்ளது. தீர்த்தக்கரையில் உள்ள இம்மண்டபம் கருங் கல்லினுல் செய்யப்படும் வேலைப்பாடுகளையும் சிற்பம் கொடுங்கை முதலியவற்றையும் செங்கல்லாலே செய்வித்துள்ள கலைச்சிறப்புடையது. தொல்பொருள் ஆய்வுத்துறையின் பரா மரிப்புக்குரியதாயுள்ளது.

கட்டுரை எண். 18.

அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M A., B. Lit.,
D. P. P. A., D. U. N. I. U.,

அதிசயமான வடிவுடையாள்! அரவிந்தம் எல்லாம்
துதிசய ஆனன சுந்தரவல்லி, துணையிரதி
பதிசய மானது அபசயமாக முன்பார்த்தவர்தம்
மதிசய மாகவன்றோ வாமபாகத்தை வவ்வியதே? (17)

அ. அதிசயமான வடிவுடையாள்

(1) வியப்பினை ஏற்படுத்தும் அழகிய திருமேனி யுடையவள்.

(2) தொங்கும் தோட்டம், தாஜ்மஹால் போன்றவற்றை அதிசயங்கள் எனக் குறிப்பிடுகின்றோம். அவற்றுக்கு இணையானவையும் ஏற்றமிக்கனவும் எங்குமின் மையாலும், வேறு எங்கும் காணத் தக்கனவல்ல என்பதாலும், காண்பாரின் கண்ணுக்கு விருந்தாகி, காணாரையும் காணவேண்டும் என்ற வேட்கைக்கு ஆட்படுத்துவதாலும் அவற்றினை அதிசயங்கள் என்கிறோம்.

மனிதனின் படைப்புக்கே அவ்வளவு மகத்துவம் உண்டெனில் எம்பெருமாட்டியின் வடிவு விளைக்கும் வியப்பு அல்லது அதிசயத்துக்கு அளவேது?

(3) கண்டாரைக் கவர்ந்திழுத்து ரசிக்கச்செய்யும் பேரழகு உடைமையினாலேயே அவர்களுக்கு அபிராமி என்னும் திருப்பேர் வழங்கலாயிற்று.

(4) 'வடிவு' என்பதற்கே அழகு என்ற பொருளும் உண்டு. இலங்கைத் தமிழர் "பெண் நல்ல வடிவாய் இருக்கிறாள்" என்று கூறுவர். "வடிவாய் நின் வலத்துறையும்" என்ற

ஆழ்வார் பாடலில் வடிவு என்ற சொல் அழகு என்ற பொருளில் ஆளப்படுவதைக் காண்கிறோம், ஆகவே எங்கும் காணற் கரிய, ஈடு, இணையில்லாப் பேரழகுடையவளை 'அதிசயமான வடிவுடையாள்' என்றார்.

(5) அவளது விச்வருபமான அதிசய வடிவை மும்மூர்த்தி களும் கண்ட வரலாறு தேவிபாகவதத்தில் கூறப்படுகிறது. பாண்டன், மகிடன் முதலானவர்களுடன் போரிடும் பொழுதும் அவள் அதிசய வடிவங்கள் பலகொண்டதனையும் புராணங்கள் புகழ்கின்றன. அதிசயமான ஒலிவடிவாகவும் ஒளிவடிவாகவும் அவள் யோகிகளுக்குக் காட்சிதருவாள் என யோகநூல்கள் குறிப்பிடுகின்றன.

(6) இயற்கையில் நிகழும் அதிசயங்கள் யாவும் அவளது வடிவே. பல கோடி அண்டங்கள், அவற்றின் சுழற்சி, யாவும் அவளது வடிவே. மனிதன் இயற்றும் ஒருசில செயல்களை நாம் அதிசயம் என்றும் அற்புதம் என்றும் வியக்கிறோம். ஆனால் அன்னையின் சிருஷ்டியில் அனைத்தும் அதிசயம்! அதிசயமே அவள் வடிவு.

'அப்போலோ பதினொன்று' என்ற விண்கலத்தில் அமெரிக்க விண்வீரர்கள் பயணம் செய்து சந்திரனின் மீது முதலில் காலடிவைத்தார்கள். இதனை உலகம்முழுவதும் அதிசய மாக நோக்கியது. அது சமயம், அவ்வதிசயத்தை நிகழத்திய விஞ்ஞானிகளே இறைவன் 'லட்சோப லட்சம்' அதிசயங் களுக்குக் காரணமானவன் எனப் போற்றி அவனது கருணை யினை வேண்டினர். "Lord of Million, Million Wonders! help us to lay our foot-prints on the moon" என்ற அவர்களது பிரார்த்தனை சிந்திக்கத்தக்கது.

(7) கணந்தோறும் தோன்றும் வியப்புக்கள் அத்தனையும் காளிபராசக்தியின் வடிவே என்று பாரதியாரும் 'பாஞ்சாலி சபதத்தினிடை பாடக் காண்கிறோம்.

"கணந்தோறும் வியப்புக்கள் புதியதோன்றும்
கணந்தோறும் வெவ்வேறு கனவு தோன்றும்
கணந்தோறும் நவநவமாய்க் களிப்புத் தோன்றும்
கருதிடவும் சொல்லிடவும் எளிதோ? ஆங்கே
கணந்தோறும் ஒரு புதிய வண்ணங்காட்டிக்
காளி பராசக்தி அவள் களிக்கும் கோலம்
கணந்தோறும் அவள் பிறப்பாள் என்றுமேலோர்
கருதுவதன் விளக்கத்தை இங்குக் காண்பாய்"

—பாரதியின் பாஞ்சாலிசபதம்

(8) தனது அறிவு அளவிற்கு அளவானது அதிசயம் என முன் பாடலில் வியந்தார். பின்னர்த் திருவிளையாடலில் இது ஒன்றும் அதிசயமில்லை! ஏனெனில், அவளது வடிவம், செயல், யாவும் அதிசயந்தான் என முடிவுக்கு வருவதுபோல் இப்பாடலில் துவக்கம் அமைகிறது.

ஆ. அரவிந்தம் எல்லாம் துதிசய ஆனன சுந்தரவல்லி

(1) தாமரைமலர்கள் எல்லாம் போற்றித் துதிக்கும் வெற்றியுடைய திருமுகங்கொண்ட அழகிய பூங்கொடி போன்றவள்.

(2) பெண்களின் முகத்துக்கு உவமையாகப் புலவர்களால் கூறப்படும் தாமரை மலர்களைவிட அன்னையின் திருமுகம் ஈடில்லா எழிலுடன் விளங்குகிறது. எவ்வண்டத்திலும் அவளது திருமுகத்துக்கு இணையான தாமரைமலர் இல்லை. ஆகவே, அவளது முகத்தழகுக்குஈடாக-உவமையாக முடியாது என்பது தோற்ற அந்தத் தாமரைமலர்கள் அனைத்தும் ஒன்று கூடின! அன்னையின் முகத்தழகுக்கு முன் தோற்று விட்ட நாம் அனைவரும் இனி அவளைப் போற்றித் துதிடபதைவிட வேறு வழியில்லை எனத் தீர்மானித்து அவ்வாறே செய்யத்துவங்கின.

முகம் அல்லது ஆனனம் மட்டும் அரவிந்தத்தை விட அழகுடையது அல்ல! அவளே பூங்கொடிதான். எனவே சுந்தரவல்லியும் ஆகிறாள்.

(3) அழகிய வெண்தாமரைமலர் ஒன்றைக் கலைமகள் விரும்பி இருப்பிடமாய்க் கொண்டாள். அவ்வாறே செந்தாமரையொன்றை இலக்குமியும் தேர்ந்தெடுத்தாள். பிரமனும் கமலத்திருந்தான். சில தெய்வங்கள் சில திருக்கோலங்களில் தாமரையினைத்தங்கள் கரங்களில் தாங்கிநின்றன. அங்ஙனம் கடவுளருடன் தொடர்பு கொண்ட தாமரைகளும் கூட அன்னையின் முகத்துக்குமுன் தோற்றன.

மற்றும், "அப்பொழுதலர்ந்த செந்தாமரை," "சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை" என்றெல்லாம் கம்பர் போன்றோர் குறிப்பிடும் அத்தனை தாமரைகளும் அன்னையின் முகத்தெழிலுக்குமுன் தோற்றுவிட்டன. 'அரவிந்தம் எல்லாம்' என்ற சொற்றொடர் இவ்வாறு அனைத்துத் தாமரைகளையும் அடக்கி நிற்கிறது.

(4) இங்கு யோக சாஸ்த்திர முறையிலும் பொருள் கொள்ளலாம். மூலாதாரமாகிய தாமரை முதல் சகஸ்ரகமலம்

ஈருன தாமரைவரை அடியார்களால் ஆங்காங்கே எழுந்தருளச் செய்யப் பெற்றுத்துதிக்கப்படும் அழகிய முகமுடைய கொடி போன்றவள் எனப்பொருள் கொள்ளலாம். ஆதார கமலங் களிலேயே அவர்களுக்கு அதிசயமான வடிவம் காட்டுகிருள்.

(5) " தத்வக்த்ரம் பரிஹஸதி பங்கேருஹருசிம் தாமரையின் காந்தியினை அம்முகம் பரிஹாசம் (ஏளனம்) செய்கிறது." அவளது முகம் தாமரையினை வென்றசிறப்பை ஆதிசங்கரர் சௌந்தரிய லகரியில் இவ்வாறு குறிப்பிடுகிருர்.

இ. துணை இரதிபதி.........வாமபாகத்தேவவ்வியதே.

(1) இரதியின் துணையும் கணவனுமான மன்மதனின் தோல்விகாணு வெற்றியானது தோல்வியாகும்படி முற்காலத்தில் நோக்கிய சிவபெருமானது மதியும் சயங்கொள்ளும் படியல்லவா அவரது இடப்பாகத்தை ஆக்ரமித்தாய் ?

(2) இரதியின் துணையும் பதியுமான காமன் யாரிடமும் தோலாதவன். எப்போதும், எவ்விடத்தும் வெல்பவன். அவனது தோலாத வெற்றியும் தோல்வியாகும்படி நெற்றிக்கண்ணல் நோக்கி அவனைச் சாம்பராக்கினன் இறைவன், வெற்றியே பெற்று வந்தஇரதியின் கணவன் தோற்கும்படி கண்ணல் எரித்த வரலாற்றினை "இரதிபதி சயமானது அபசயமாகப் பார்த்தவர்" என்ற சொற்ருெடர் குறிப்பிடுகிறது.

(3) "விட்டவெம் பகழி ஐந்தும் வியத்தகு விமலன் தன்மேல்
பட்டலும் சிறிதே வேளைப் பார்த்தனன் "

என்ற கந்தபுராணப் பாடலிலும் " பார்த்தனன் " என்றேவருதல் காண்க.

அம்பிகை இறைவனைத் தன்வயம் ஆக்கி விட்டதனல் அவள் அவன் மதியைச் சயங்கொண்டாள். ஆனல் இங்கு " பார்த்தவர் மதிசயமானது " என்கிருர் பட்டர்.

" தங்கள் பிள்ளை தேர்வில் தேறினரு ? " எனக்கேட்டால் " நன்ருகத் தேறினன்! " எனப் பதிலளிக்கிருர் தந்தை. இங்குத் 'தேறவில்லை' என எதிர்மறைப் பொருள் வருவது போல் 'மதிசயமானது' என்ற சொற்ருெடருக்கு மதிதோற்றது எனவும் பொருள் கொள்கின்றனர் உரையாசிரியர்கள்.

(4) 'சயம்' என்றது குறைதல் என்று பொருள்படும். 'க்ஷயம்' என்ற வடசொல்லின் திரிபாகக் கொண்டு பொருள்

கொண்டால்—யோக மூர்த்தியாக இருந்தவரின் உயர்ந்த மதியின் சிறப்புக்குறைந்து போகமூர்த்தியாகும்படி ஆக்கினன் எனவும் கொள்ளலாம்.

(5) உரையாசிரியர் திரு. சண்முகநாதன் அவர்கள் இங்கு 'மதி' என்பதை 'சங்கல்பம்' அல்லது விருப்பம் எனப்பொருள் கொள்கிறார்.

ஏகமாய் நின்ற இறை அல்லது பிரம்மம் நான் பலவாக ஆவேன் என சங்கல்பம் கொண்டது. அப்போது சக்தி முதலில் தோன்றியது. நிர்க்குணமான சக்தி சகுணமாக வெளிப்பட்டு இறைவனின் இடப்பாகத்தில் சேர—வாமபாகத்தை வவ்வ— இறையின், "நான் பலவாக ஆவேன்" என்ற விருப்பம் வெற்றியடையக் காரணமாய் நின்றது. அதனால் 'மதிசய' மாக வென்றார்.

அதாவது, யோக மூர்த்தியினைப் போகமூர்த்தியாக்கி, இடப் பாகத்தினை அன்னை கவர்ந்ததுவும் இறைவனது விருப்பமும் செயலும் வெற்றியாய் முடிவதற்கேயாகும்.

இப்பாடலின் பாராயணபலன் 'சத்ரு ஜெயம், (பகை கடிதல்) ஆகும்.

பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானம்

இன்று இத்திருக்கோயிலிலுள்ள ஸ்ரீசுயம்புநாதசுவாமியைத் தரிசிக்கவந்தேன். கோயில் மிகவும் சுத்தமாகவும் சுவர்களுக்கு வர்ணம் தீட்டப்பட்டும் மிகவும் கவர்ச்சிமிக்க திருக்கோயிலாக இருந்தது. மேலும் இக்கோயில் நிர்வாகம் சீரிய முறையில் நடைபெறுகிறது என அறிய மிக்கமகிழ்ச்சி.

என் நல்வாழ்த்துக்கள்.

(ஒ-ம்) **சிவசுப்பிரமணியம்,**

ஆணையர்,

7—7—81. ஊராட்சி ஒன்றியம், நன்னிலம்.

சிவநாமாவளிப் பாடல்

திருமுறைக்கலாநிதி

வேலூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்

இராகம் - மோஹனம்] [ஆதிதாளம். சதுஸ்ரநடை.

நமச்சிவாய நமச்சிவாய எனும்நாம மந்திரமே
நாளும் நாளும் சொல்லிச்சொல்லி நன்மைபெறுவோமே.
(நமச்)

1. அமரர்கள் தலைவன் குமரன் தகப்பன்
அடியவர்க் கெளியவன்
அடிபணி பவர்உளம் குடிகொள் பவனவன்
அஞ்செழுத்தனவன் (நமச்)

2. நாளும் தில்லையில் ஆடுகின்ற
அம்பலவன் எம்பெருமான்
நஞ்சணி கண்டன் செஞ்சடையப்பன்
நான்மறை தொழுகழலன் (நமச்)

3. நெஞ்சம் நெகிழ்ந்து தொழுபவர்க்கு
முன்னின்று அஞ்சல்என்பான்
நிலவு நீர்சடை வைத்திடும் நிமலன்
நினைப்பவர் மனத்துள்ளான் (நமச்)

4. ஒற்றை விடையன் நெற்றிக் கண்ணன்
உமையொரு பாகனவன்
உடல்பொருள் ஆவி உனக்கே என்பார்க்
குற்ற துணையாவன் (நமச்)

5. ஏத்துவார்க் கருளும் இறைவன் என்றும்
இன்பவடிவானவன்
எவ்வுலகுமாகி எவ்வுயிருமாகி
எண்குணத்தனவன் (நமச்)

6. ஐந்தொழில் செய்யும் அய்யனவன்
ஐங்கரத்தனுக்கே தந்தையவன்
அஞ்சும் வேளையில் ஆறுதல் தந்து
அன்பருக்கே துணையாய்வருவன் (நமச்)

7. நாடும் அடியவர் உளம்நாடுபவன்
ஞான மயமானவன்
நன்றே யுடையான் தீதே இல்லான்
நண்ணினூர்க்கு நல்லான் (நமச்)

8. எண்ணுதற் கெட்டா இறைவன் ஏழேழ்
உலகுக் கப்பாலான்
எண்ணும் அடியவர்க் கென்றும் எளியவன்
இமையவர்க் கரியவன் (நமச்)

9. பெண்ணொரு பாகன் அரவா பரணன்
பிறையணி சடையனவன்
பிழை பொறுப்பவன் பிறப் பறுப்பவன்
பேசப்பேச இனியன் (நமச்)

10. மெய்யடி யார்உளம் மேவி யிருப்பவன்
உய்வழி அருளுபவன்
மேல்கீழ் அடிமுடி மாலயன் காணு
மேலாம் இறைவனவன் (நமச்)

11. ஆளா னூர்க்கா ளாகுவன் அடியார்
அல்லல் களைபவன்
ஆல நீழலில் அமர்ந்தவன்
ஆனந்த வடிவானவன் (நமச்)

12. சிவனெனும் நாமம் உடையசெம் மேனியன்
தேனூர் அமுதனவன்
சிவாயநம என்பார்க்கு அபாயம்
வாரா தருளுபவன் (நமச்)

துளசி (Holy basil)

தஞ்சை. திரு. நா. தனுக்கோடி,

மருத்துவ அலுவலர், திருநெய்ப்பேர். 610 103

துளசி நம் நாட்டில் பரவலாகக் கிடைக்கக் கூடிய கற்ப மூலிகை. தெய்வமாக வணங்கக் கூடியது. மரணத்தை உண் டாக்கும் கபத்தைப் போக்கக் கூடியது. இதில் செந்துளசி, கருந்துளசி, நிலத்துளசி, நாய்துளசி, கல்துளசி, முள்துளசி, காசித்துளசி எனப் பலவகை உள்ளதாகப் பதார்த்த குண சிந்தாமணி கூறுகிறது.

ஐயம் வயிறுளைச்சல் அஸ்திசுரம் தாகமும்போம்
பைய சுரமாந்தம் பறக்குங்காண் — மெய்யாய்
வாயி னரோசகம்போம் வன்காரஞ் சூடுள்ள
தூய துளசிதனைச் சொல்.

அடிக்கடி ஏற்படும் ஜலதோஷம், ஆஸ்த்மா, எண்ணிக்கையில் அதிகரித்துக் கொண்டுவரும் ஈஸினேபில் இவைகளில் மிக்க பயனுள்ளது. குழந்தைகளுக்கு ஏற்படும் கணச்சூடு, மந்தசுரம், குளிர்சுரம், கோழை இருமல் நீக்கக்கூடியது.

துளசியைக் கொதிக்கும் வெந்நீரில் போட்டு மூடி இளஞ் சூட்டுடன் அடிக்கடி பருக மேற்சொல்லிய குணம் தரும். கொதிக்கும் பாலில் சுத்திசெய்த துளசியிலையைப் போட்டுக் காய்ச்சி இளஞ்சூட்டுடன் வடிகட்டி, தேன்சேர்த்துப் பாலர் களுக்குக்கொடுக்க மிகுந்த நற்பலனை அளிக்கிறது. துளசியிலை கஷாயத்தில் டீ, டிகாஷன் போட்டு, பால் விட்டு இனிப்பு சேர்த்துப் பருக, நறுமணமாயும் சுறுசுறுப்பாயும் இருக்கும். கபத்தைக் கண்டிக்கும்.

வெண்ணெய் உருக்கும்போது முருங்கையிலையிட்டு நெய் காய்ச்சுவதுபோல், துளசிதளம் இட்டுக் காய்ச்சி வடித்தநெய், தினமும் உபயோகித்துவரக் கபம் நீங்கி, கற்பமாகப் பயன் படும். மேற்படி மூலிகையைப் போட்டுக்காய்ச்சிய நல்லெண் ணெய், தேங்காய்எண்ணெய் நீராடுதலுக்கும், தினம் தலையில் தடவிக்கொள்ளுதற்கும் உகந்தது. மூக்கில் நஸ்ஸியமிடப் பீனிசம் குணமாகும். திருமாலுக்கு நிகரான துளசிதளத்தை, முறைப்படி உபயோகித்து ஆரோக்கியமாய் வாழ இறைவன் அருள்புரிவாராக.

———

ஊழும் முயற்சியும்

வித்துவான். திரு. மு. வைத்தியநாதன்,

திருச்சிராப்பள்ளி

முன்னுரை :

மனிதன் வாழ்வாங்கு வாழவேண்டியவன். அவன் வாழ்வு சிறக்க, ஊழ் என்னும் தெய்வ ஆற்றலும் முயற்சி என்னும் செயற்பண்பும் துணைபுரிதல் வேண்டும். இவையிரண்டின் ஆதிக்க எல்லையில் வாழ்பவன்தான் மனிதன்.

தெய்வ ஆற்றல் :

ஊழ் ஒரு தெய்வஆற்றல். அது தருக்கத்திற்கு அப்பாற் பட்டது. அதன் செயல்முறைகளை எதனாலும் தடைப்படுத்த முடியாது. இந்த ஊழ், ஆகூழ், போகூழ் என இரண்டுவகைப் படும். இந்த ஊழ் அதற்குரிய காலத்தில் முதிர்ந்து, ஆகூழானல் நன்மையையும், போகூழானல் தீமையையும் தந்தே முடிவு பெறும். இந்த ஊழினைப் பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்னும் பெயர்களாலும் சான்றோர் குறித்துள்ளனர்.

மனிததத்துவக் கொள்கை :

சங்ககாலத்தில் இரண்டுவகையான வாழ்வு முறைகள் இருந்தன. ஒன்று இயற்கையான உலகியல் வாழ்வுமுறை. மற்றொன்று மறுமைக்கொள்கை வாழ்வுமுறை. உலகப் பாவல ராகிய தெய்வப்புலவர், இந்த இரண்டுவகை வாழ்வுமுறைகளை யும் ஆராய்ந்து, அவையிரண்டின் அடிப்படைக்கோட்பாடுகளை இணைத்து ஒரு புதிய கொள்கையை உருவாக்கியுள்ளார். அது மனிததத்துவக் கொள்கை ஆகும்.

இந்த உலகில் வாழும் மனிதன் எந்த நிலையிலும் துன்பம் அடைதல் கூடாது. அவன் நிறைவாழ்வு வாழவேண்டும் என்பதே அந்தத் தெய்வப் புலவரின் எண்ணமாகும். அவர் இயற்கையான உலகியல் வாழ்வு முறையில் முயற்சிக்கு அதிக மதிப்பு இருப்பதையும், மறுமைக் கொள்கை வாழ்வு முறையில் ஊழுக்கு அதிகமதிப்பு இருப்பதையும் உணர்ந்து, அவைகளை அடிப்படையாகக் கொண்டு அமைத்ததே மனிததத்துவக் கொள்கை வாழ்வுமுறையாகும்.

ஊழின் வலிமையை விளக்குகிற வள்ளுவர் எந்த விடத்திலும் முயற்சியைத் தாழ்வுடையதாகக் கூறவில்லை. ஆனல், அந்த முயற்சி ஊழிற்கு அடங்கிய செயற்பண்பு என்று கூருமலும் இல்லை.

கயமை :

அதிகாரவைப்பில்கூட சிறந்த உண்மைகளைப் புலப்பட வைப்பவர்தெய்வப்புலவர். கடவுள் வாழ்த்து முதலாகநூற்றுஏழு அதிகாரங்களில், இல்லறவாழ்வு துறவறவாழ்வு நெறிமுறைகளை ஆராய்ந்து விளக்கியபின், கயமைஎன்ற அதிகாரத்தைப் பொருட்பாலின் இறுதிஅதிகாரமாக வைத்துள்ளார். இதன் நோக்கம் இத்தனை வாழ்வியல் உண்மைகளையும் அறிந்தும் ஒருவன் திருந்தவில்லையானல், அவன் கயவனுகத்தான் இருக்க வேண்டும் என்பதே அவர் கருத்தாகும்.

ஊழியல் :

பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல்களில் பல்வேறு வழிகாட்டுதல்களை விளக்கியபின், வள்ளுவர் 'ஊழ்' என்ற அதிகாரத்தை வகுத்து, அதன்வழி, 'மனிதனே' நீ என்னதான் முயற்சிசெய்தாலும் எத்தனை வழிகளில் உன்திறமையை வெளிப்படுத்த நினைத்தாலும், காலத்தான் அமையும் ஊழின் ஆதிக்கத்தில், நீ அடங்கி வாழவேண்டியவன்தான்" என்று கூறுவார்போல அறத்துப்பாலின் இறுதி அதிகாரமாக ஊழ் அதிகாரத்தை அமைத்துள்ளார்.

முதற்காரணம் :

உலகில்வாழும் மக்கள் அனைவருக்கும் இன்பத்துன்பங்கள் பொதுவாதல்போல, அவற்றின் மூலகாரணமாகிய ஊழ்வினையும் இல்லறம் துறவறம் போன்றநெறிகளை மேற்கொண்டவர் களுக்குப் பொதுவாகும். அது இல்லறத்தார்களுக்குப் பொருள் இன்பங்களையும், துறவறத்தார்களுக்குத் தவம் ஞானம் போன்றவைகளையும் சித்திக்கச்செய்யும்.

உலகவாழ்விற்கு உதவும் பொருள் பெருக்கத்திற்கு முயற்சியும், கைப்பொருள் அழிதற்குச் சோம்பலும் காரண மாகும். இந்தஇரண்டுமே ஆகூழால் போகூழால் தோன்றுவன. "ஆகூழால் தோன்றும் அசைவின்மை; கைப்பொருள் போகூழால் தோன்றும்மடி" என்றுகூறி இக்கருத்தை உறுதி செய்கிருர் வள்ளுவர்.

ஊழ் அரங்கேற்றம் :

திருவள்ளுவர் தன்னூலில் அழுக்காறுமை அதிகாரத் திலேயே ஊழ்க்கொள்கையை அரங்கேற்றம் செய்துவிடுகிருர். தீயவனிடம் உள்ள செல்வச்செழிப்பையும், அறிவும்நல் லியல்பும் உடையாரிடம் உள்ள வறுமையையும் நினைத்துப் பார்க்கிருர். இந்தநிலைக்கு அவரால் காரணம் எதுவும் கூறமுடிய வில்லை. இது நினைத்துப்பார்க்க வேண்டியது என்கிருர். பழம் பிறப்பின் பயன்என்று முடிவுசெய்கிருர். " அவ்விய நெஞ்சத் தான் ஆக்கமும் செவ்வியான் கேடும் நினைக்கப்படும் " என்பது அவர் ஊழ் அரங்கேற்றிய குறள்.

ஊழின் தன்மைகள் :

ஆகூழிற்கும் போகூழிற்கும் தனித்தனிப் பயன்உண்டு என்று தெரிவிக்கின்ருர். நன்மை செய்தவன் நற்பயன்களையும், தீமை செய்தவன் துன்பங்களையும் அனுபவிக்கவேண்டும் என்று கூறுகின்ருர். தீவினையின் பயனுகிய பாவத்தை நல்வினை யின் பயனுகிய புண்ணியத்தால் நீக்கமுடியாது. ஒரு குழந்தையைக் கொன்றுவிட்டு, அதன் பெற்ருேருக்கு உதவி செய்தால், குழந்தையைக் கொன்றபாவம் விடாது. அதற்குப் பயன்உண்டு. குழந்தையின் பெற்ருேருக்குச் செய்தஉதவிக்குத் தனியாகப்பயன் உண்டுஎன்று விளக்குகிருர். அதிகபுண்ணியம் செய்தஒருவர், தன்புண்ணியத்தின் ஒருபகுதியை, அதிக பாவம் செய்தவர்க்கு வழங்கி, அவரைப் பாவத்திலிருந்து விடுவிக்க முடியாதுஎன்கிருர். இதுஊழாகிய இயற்கையின் — இறைவனின் சட்டம் என்றும் தெரிவிக்கின்ருர். இதிலிருந்து எவராலும் தப்பிக்க முடியாது என்று உறுதிசெய்கிருர்.

துணைக்காரணம் :

உலகவாழ்விற்குத் தேவைப்படும் பொருளின் ஆக்கத்திற்கு ஊழ்தான் முதற்காரணம் ஆயினும், சோம்பல் என்னும்படி அதற்குத் துணைக்காரணம் என்கிருர்.

ஊழ் என்னசெய்யும் ?

ஒருவன் அறிவுடையவனுக இருப்பதற்கும் அறிவிலியாக இருப்பதற்கும் ஊழ்தான் காரணம் என்கிருர். போகூழ் உடை யவன், " நுண்ணிய நூல் பல கற்பினும், மற்றுந்தன் உண்மை அறிவே மிகும் " என்று தெரிவிக்கின்ருர். ஊழால் உலக இயற்கை இரண்டு பிரிவினது. செல்வம் உடைடயராக இருப்பது வேறு. அறிவு உடையராக இருப்பது வேறு என்று உலக இயற்கைபற்றி அறிவிக்கின்ருர். அறிவுடையார் ஏழையாகவும்

அறிவிலார் செல்வராகவும் இருப்பதற்கு ஊழேகாரணம் என்கிறார். தீவினைவந்தபோது ஒருவர் தேடிவைத்துள்ள பொன்னும் மண்ணும் நல்வினை வந்தபோது நமக்கு உரிமையாயுள்ள மண்ணும் பொன்னும் என்கிறார். எப்படி முயற்சி செய்து காத்தாலும் போகும் பொருள் போகவேசெய்யும். இருக்க வேண்டியபொருள், போக்கினும் போகாது என்கிறார். பொருள் சேர்ப்பதற்கு ஊழின் உதவி தேவையாதல் போல, அதை அனுபவிப்பதற்கும் ஊழின் உதவி தேவையாகும் என்கிறார். ஒரு வறுமையாளன் துறவறம் மேற்கொள்ளாது வருந்தக் காரணம் ஊழ்தான் என்கிறார். இறுதியாக ஊழைவிட பெருவலியுடையது எதுவும் இல்லை. அதை ஏதேனும் ஒருவழியில் நீக்க முயன்றாலும், அங்கும் வந்து ஆதிக்கம் செலுத்தும் என்கிறார். ஒருவரின் நிழல் வீயாது அடியுறைதல் போல, தீவினைசெய்தார் கெடுதல் உறுதிஎன்கிறார்.

ஊழும் முயற்சியும் :

ஊழ் ஒரு தெய்வநெறி. அது குற்றமில்லாதது. முயற்சி ஒரு வாழ்வியல் செயற்பண்பு. அது குற்றம் உடையது. ஊழ் புலப்படாத விளைவினைத்தருவது. முயற்சி புலப்படும் பொருள்களைத் தருவது ஊழ்வினை நிகழ்ந்துகொண்டே இருக்கும். முயற்சி தடைபடக் கூடியது. ஊழ் ஒருவன் கடன்பட்டிருத்தல் போன்றது. முயற்சி செய்தால் நன்மை. இல்லையேல் எதுவும் இல்லை. ஊழ் ஒரு முழுமையான தெய்வ ஆற்றலுடைய தலைமைத் தன்மையுடையது. முயற்சி ஊக்கத்திலிருந்து பிறந்த துணை செயற்பண்பு ஆகும். ஊழ்வினை எல்லைகடந்தது. முயற்சி எல்லைக்கு உட்பட்டது. ஊழ் தெய்வசக்தியுடையது. முயற்சி மனிதசக்திக்கு உட்பட்டது. ஊழ் இம்மை மறுமை முதலிய பிறவித் தொடர்புடையது. முயற்சி இப்பிறப்புச் செயல். ஊழ் பண்டே விளைந்து இன்பதுன்பங்களைத் தந்துகொண்டிருப்பது. முயற்சி பொருள் முதலியன தேடுவதற்காக நாம் எடுத்துக் கொள்ளும் செயற் பண்பு. ஊழ் எல்லையற்ற இன்பம்தரும். அல்லது துன்பம்தரும். முயற்சி ஓர் எல்லைக்குட்பட்ட இன்பமே தருவது. ஊழ் எப்பொழுதும் வீணாவதில்லை. முயற்சி சிலபோது பாழ்பட்டுப் போவதுண்டு. ஊழ் தானாகத் தொழிற்பட வல்லது. முயற்சிக்கு மனிதசக்தியின் துணைவேண்டும். முயற்சிக்கேற்ற பயன் கிடைக்கவேண்டும் என்பதுகூட ஊழ் அமைப்புத்தான். ஊழ் தானேஇருந்துஆக்கவும்அனுபவிக்கவும் வல்லது. முயற்சிக்கு ஆக்கும்ஆற்றல் உண்டேதவிர, அனுபவிப்பது என்பது அதன் பொறுப்பில் இல்லை. ஊழிற்கு எதன் துணையும் தேவையில்லை. முயற்சிக்கு அறிவின் துணைவேண்டும்.

கவிதை அலைகள்

பேராசிரியர். திரு. வ. பெருமாள்
எம். ஏ., பி. டி., எம். ஆர். ஏ. எஸ்., எப். எப். ஐ.,
தலைமைப் பேராசிரியர்,
தலைமை ஆராய்ச்சி நெறியாளர், பண்பகம்,
சொர்ணநகர், ராபர்ட்சன்பேட்டை,
கோலார் தங்கவயல், (K. G. F.) 563 122 கருநாடக மாநிலம்.

பயனிலையை அடிப்படையாகக் கொண்டு கவிதையை முத்தகம், குளகம் என இருவகையாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு செய்யுளும் ஒவ்வொரு பயனிலையைக்கொண்டு முடிந்தால் அதற்கு முத்தகம் என்று பெயர்; பல பாடல்கள் ஒரே பயனிலையைக்கொண்டு முடிந்தால் அதற்குக் குளகம் என்று பெயர். நிலை அடிப்படையில் தனிநிலை, தொகைநிலை, தொடர்நிலை என்று கவிதையை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். தனித்தனியே அமைந்த பாடல்களைத் 'தனிநிலை' என்றும், தனித்தனிப் பாடல்களை ஏதேனும் ஓர் அடிப்படையில்தொகுத்து அமைத்தால் அவற்றைத் 'தொகை' என்றும், ஏதேனும் ஒரு பொருள் குறித்துப் பலபாடல்கள் தொடர்ந்துவந்தால் 'தொடர் நிலை' என்றும் குறிப்பது மரபு. 'தொடர்நிலைச்' செய்யுளைப் பொருள் தொடர்நிலை சொற்றொடர் நிலை என இருவகையாகப் பிரிக்கலாம்.

பொருள் அமைப்பில் தொடர்ந்து வருவது பொருள்தொடர் நிலைச் செய்யுள். சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி முதலிய காப்பியங்களும், இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களும் இவ்வகையைச் சேர்ந்தவை. சொல்லமைப்பில் தொடர்ந்துவரும் பாடல்களுக்கு 'சொற்றொடர் நிலைச் செய்யுள் என்று பெயர். இவ்வகைப் பாடல்களில் முதல் பாட்டின் அந்தம் அடுத்த பாட்டின் ஆதியில் வருவதுண்டு. இவற்றிற்கு 'அந்தாதி' என்று பெயர். பொருள் அடிப்படையில் அகம் (Subjective) புறம் (Objective) என்று கவிதைகளை இருவகையாகப் பகுப்பது தமிழ்மரபு. அகப்பொருள் கவிதைகளை உரிப்பொருள் அல்லது நில அடிப்படையில் குறிஞ்சி, முல்லை மருதம், நெய்தல், பாலை என்று ஐவகையாகப் பாகுபாடு செய்வது தமிழுக்கு உரிய இலக்கியப் பண்பாகும்.

புறப்பாடல்களிலும் பல பிரிவுகள் உண்டு. அவற்றில் கொடை, வீரம் ஆகிய இரண்டும் கருத்துக் கருவூலங்களாகத் திகழும். கலை கலைக்காகவே என்பதைப் போலக் கவிதை கவிதைக்காகவே என்னும் நோக்குடன் இயற்றப்படும். கவிதை தனிக்கவிதை (Pure literature Poetry) எனப்படும். பிரச்சாரம், பயன் முதலியநோக்குடன் இயற்றப்படும் கவிதை சார்புக்கவிதை (Applied Poetry) எனப்படும். கவிதைப் பாகு பாடு எல்லா மொழிகளிலும் ஒரே மாதிரியாக அமைவது இல்லை. கவிதைப் பாகுபாட்டில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டிற்கும் இடையே வேறுபாடு உண்டு. எடுத்துக்காட்டாகப் பதினன்கு அடிகள் கொண்ட கவிதை (Sonnet) என்ற ஒரு தனிப்பிரிவு ஆங்கில மொழியிலுள்ள யாப்பில் உண்டு. ஆனல் அத்தகைய கவிதை வகை தமிழில் இல்லை. ஆங்கிலேயர் உணர்ச்சிக் கவிதை (Lyric) காப்பியம் (Epic), நீதிக் கவிதை (Didactic poetry) முல்லைக்கவிதை (Pasteral poetry) பக்திக் கவிதை (Hymns) அங்கதக்கவி (Satiric poetry) மெய்யறிவுக் கவிதை (Reflective poetry) என்று கவிதைகளைப் பாகுபாடு செய்வர். கவிதைப் பாகுபாட்டைப்பொறுத்தவரை தமிழுக்கும் ஆங்கிலத் திற்கும் வேறுபாடு உண்டு என்ருலும், இருமொழிகளுக்கும் இடையே ஒற்றுமையுமுண்டு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. குறள் அல்லது ஈரடிக்கவிதை (Couplet) நாலடிக் கவிதை அல்லது நாலடி வெண்பா (Quatrain). அகவற்பா (Bolank Verse), நெடும்பாட்டு (dlyll), போன்ற யாப்புக்கள் பெரும்பாலும் தமிழுக்கும் ஆங்கிலத்திற்கும் பொதுவானவை. அவை போன்று, இரங்கற்பா அல்லது கையறவு (Elegy), என்னும் கவிதை வகையும் இருமொழிகளுக்கும் பொதுவானது. நாடோடிப் பாடல்கள் (Ballad), தாலாட்டுப் பாடல்கள் (Lullaby), போன்ற மக்கள் கவிதைகள் எல்லாமொழிகளிலும் உண்டு.

யாப்பு அமைப்பு :-

யாப்பு என்னுஞ்சொல் செய்யுளைக் குறிப்பதுடன் செய்யுள் இலக்கணத்தையும் குறிக்கும். தொல்காப்பியச் செய்யுளியலை யாப்பதிகாரம் என்று குறிப்பிடுவதுமுண்டு. அவிநயனர், காக்கைப் பாடினியார், சிறுகாக்கைப் பாடினியார், கையனர், நத்தத்தனர் பல்காயனர், பல்காப்பியனர், மாயேச்சுரனர் முதலியபுலவர் பலர் தனித்தனியே யாப்பிலக்கணம் இயற்றினர். அவை இப்போது வழக்கில் இல்லை. அமிர்தசாகரரால் இயற்றப் பட்ட யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்னும் இரு நூல்களே பிற்காலத்தவரால் யாப்பிலக்கணப் பயிற்சிக்குச் சிறந்த நூல்களாகக் கொள்ளப்பட்டன.

இவ்விரண்டினுள்ளும் யாப்பருங் கலக்காரிகையே பெரு வழக்கிலிருக்கின்றது. காரிகை வழிநின்றுயாப்பின் அமைப்பை ஈண்டுச் சற்று நோக்குவோம். குறில், நெடில், உயிர், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம் ஆய்தம், மெய், உயிர்மெய், வல்லினம், மெல்லினம், இடையினம், அளபெடை (உயிரளபெடை, ஒற்றளபெடை) என்று எழுத்துப் பதின்மூன்று வகைப்படும். இயற்சீர், வெண்சீர். வஞ்சிச்சீர், அசைச்சீர், பொதுச்சீர் என்று சீர் ஐந்துவகை உண்டு. தளை ஏழுவகைப்படும். அவை நேரொன்றாசிரியத் தளை, நிரையொன்றாசிரியத்தளை, இயற்சீர்வெண்டளை, வெண் சீர் வெண்டளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை, கலித்தளை. ஐவகை அடிகளாவன, குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி. அடிக்கு அடுத்து அமைந்திருப்பது தொடை. மோனைத்தொடை, இயைபுத்தொடை, எதுகைத் தொடை, முரண்தொடை, அளபெடைத்தொடை, அந்தாதித் தொடை இரட்டைத்தொடை, செந்தொடை எனத் தொடை எட்டுவகைப்படும். இவற்றுள் முதல் ஐந்துதொடைகளுள் ஒவ் வொன்றிலும் எட்டு உட்பிரிவுகளுண்டு. பாட்டில் நான்கு பெரும் பிரிவுகள் உண்டு. அவையாவன. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா. எல்லாவகைப் பாக்களை யும்விட வெண்பாப் பாடுவது மிகக்கடினம். ஆசிரியப்பா மிக எளிது. இதனை, "புலவர்க்கு வெண்பாப் புலி" "ஆசிரியப்பா அவசரப்பா" என்ற பழமொழிகளால் அறியலாம். ஒவ்வொரு பாவிற்கும் ஒவ்வோர் ஓசை உண்டு. வெண்பாவிற்குரியது செப்பலோசை. ஆசிரியப்பா அகவல் ஓசையில் வரும். தூங்கலோசை வஞ்சிப்பாவுக்குரியது. கலிப்பாவுக்கு உரியது துள்ளலோசை. இங்குக் குறித்த ஒவ்வோர் ஓசையிலும் மூன்று உட் பிரிவுகள் உண்டு என்பது குறிப்பிடத் தக்கது. அதைப் போல் இங்குக் குறிப்பிட்ட நால்வகைப் பாக்கள் ஒவ்வொன் றுக்கும் இனம் உண்டு. இந் நால்வகைப் பாக்களைத் தவிர மருட்பாவும் உண்டு. புறநிலை வாழ்த்து, கைக்கிளை, வாயுறை, செவியறிவுறூஉ என மருட்பா நான்கு வகைப்படும். யாப்பின் அமைப்பை ஒருவாறு சுருக்கமாகக் கண்டோம். யாப்பிலக் கணத்தைப் பொறுத்தவரையில் தொல்காப்பியத்திற்கும் யாப் பருங்கலக்காரிகைக்கும் வேறுபாடு உண்டு.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவலகால வகையினானே"

என்னும் நன்னூல் விதிக்கு ஏற்பத் தொல்காப்பியத்தில் கூறப்பட்ட 'கட்டளையடி' முதலிய சில யாப்பு வகைகள்

காரிகையில் இடம்பெறவில்லை. காரிகையில் இலக்கணம் வரையறுக்கப்பட்டுள்ள பாவினங்கள் தொல்காப்பியத்தில் இடம் பெறவில்லை. இவ்வாறு இன்னும் பலவேறுபாடுகளும் இருக்கின்றன.

கவிதையும் இறையருளும் :-

இறையருள் இருந்தால்தான் கவிபாடலாம் என்று ஒருசாரார் கருதுகின்றனர். இறைவன் அருளால் தான் மனிதன் கவிஞனாகின்றான். எனவே, கவிஞன் கடவுளைப் பாடவேண்டும் வேறொன்றையும் பாடக்கூடாது என்று அவர்கள் எண்ணுகிறார்கள். கவிதைக்கும் இறைவனுக்கும் தொடர்பு உண்டு என்றும் கவிதைக்குத் தெய்வீக ஆற்றல்உண்டு என்றும் இவர்கள் கருதுகின்றார்கள். இதற்கு முற்றிலும் மாறுபட்ட வகையில் மற்றொரு சாரார் எண்ணுகிறார்கள். கவிதைக்கும் இறைவனுக்கும் தொடர்பே இல்லை. கவிஞன் தன் மொழிப் புலமை, கவிதை உணர்ச்சி, கவிதைத்திறன், யாப்பிலக்கணப் பயிற்சி, அழகுணர்ச்சி, பரந்த அறிவு, அனுபவம், கற்பனைவளம் ஆகியவற்றின் துணைக்கொண்டுதான் கவி பாடுகின்றானே தவிர இறைவன் அருளால் பாடுவதில்லை என்பது இவர்கள் கருத்து. தெய்வீக நம்பிக்கையுடன் பாடப்பெற்ற பாக்கள் யாவும் அருட்பாக்களாகவும் தெய்வப் பாக்களாகவும் கமழ்கின்றன. அறிவைத் துணைக்கொண்டு பாடப்பெற்ற கவிதைகள் யாவும் பொதுக் கவிதைகளாகவும் புரட்சிக் கவிதைகளாகவும் மலர் கின்றன.

கவிதையின் பிறப்பிடம் :-

ஏன், எப்படி, எதனால், எங்கு, யார், எது போன்ற வினாக் களின் நற் பயனாகப் பிறப்பது அறிவியல்; உணர்ச்சியிலிருந்து பிறப்பது கவிதை. அறிவியலின் பிறப்பிடம் மூளை; கவிதையின் பிறப்பிடம் உள்ளம். கவிஞனது உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழுகின்ற உணர்ச்சியே ஒலி நயத்துடன் வெளிப்படும்போது கவிதையாகின்றது. எனவே, கவிதை அறிவிலிருந்தோ மூளையிலிருந்தோ தோன்றுவதன்று. மாறாக உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து தோன்றுகின்றது. கவிதைக்கு நல்லதொரு இலக்கணம் வகுத்த கவிமணியவர்கள்,

" உள்ளத் துள்ளது கவிதை — இன்பம்
உருவெ டுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் — உண்மை
தெளிந்து ரைப்பது கவிதை "

என்று கவிதையின் பிறப்பிடத்தை அழகாகக் கூறுகின்றார். "கவிதை என்பது இயல்பாகப் பெருக்கெடுத்து வெளிப்படுகின்ற அழுந்திய உணர்ச்சி; அமைதியாக இருந்து நினைக்கும்போது எழுகின்ற உணர்ச்சியே கவிதையின்பிறப்பிடம்" என்று ஆங்கிலக் கவிஞர் வேர்ட்ஸ்வர்த் கூறுகின்றார். ("Poetry is the spontaneous overflow of powerful feelings; it takes origin from emotion recollected in tranquility" - Words Worth.)

(தொடரும்)

பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம்

நேற்றுமுன்தினமும், இன்றும் இந்த அருள்மிகுந்த திருக்கடவூர் திருக்கோவிலுக்குவந்து அருள்மிகு அமிர்தகடேசுவரர் அன்னை அபிராமியின் திவ்விய தரிசனம் கண்டு பிரார்த்தித்தமைக்கு மகிழ்வு அடைந்தோம். தருமபுரம் ஆதீனக்கர்த்தா ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், மிக்க நல்லமுறையில் இப்புகழ்பெற்ற ஆலயத்தை நடத்தி வருவதற்கு நான் மகாசந்நிதானம் அவர்களுக்கு என் மனமுவர்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். 5—8—81ல் என் பிறந்ததினத்தன்றும் இன்று 7—8—81 ல் எங்கள் குடும்ப நண்பர் தேவகோட்டை மா. அரு. அருணசலம் செட்டியாரவர்கள் 59 ஆவது ஆண்டு நிறைவுநாள் விழாவிற்கும் நாங்கள் எங்கள் குடும்பத்துடனும், நண்பர்களுடனும் வந்து சுவாமி தெரிசனம் கொண்ட நாட்களில் இவ்விடத்தில் உள்ள தருமபுரம் ஆதீனக்கர்த்தாவினுடைய பிரதிநிதி, தம்பிரான் சுவாமிகள் அவர்களும் நிர்வாக மேலதிகாரி அவர்களும், எல்லோரையும் வரவேற்று வேண்டிய சௌகரியங்களைச் செய்துதந்ததிற்கு எங்கள் எல்லோருடைய நன்றி சொல்ல ஆசைப்படுகிறேன்.

(ஒ-ம்) **மு. அ. முத்தையா செட்டியார்,**

ராஜா ஸர் மு. அ. முத்தையா செட்டியார்

7—8—81 செட்டிநாடு இல்லம், சென்னை 600 028.

செய்திகள்

ஆயில்யத்திருநாள் ஆலயவழிபாடு

தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலயவழிபாடு 1–8–81 அன்று திருவிளமர் அருள்மிகு பதஞ்சலிமஹேஸ்வரர் ஆலயத்திலும், திருக்கரவீரம் அருள்மிகு கரவீரநாதர் ஆலயத்திலும் சிறப்பாக நடைபெற்றது. அவ்வக் கோயில்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. ஓதுவாமூர்த்திகள் தலத் திருப்பதிகப் பாராயணம் செய்தனர். தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர் திரு. வி. சா. குருசாமிதேசிகர், எம். ஏ, அவர்களும் புலவர்மணி மு. இரத்தினதேசிகர் அவர்களும் திருக்கரவீரத் திருக்கோயிலில் சமயச் சிந்தனையுரை வழங்கினர். அச்சிடப்பெற்ற தலத்திருப்பதிகநூல் வந்திருந்த அன்பர்கட்கு வழங்கப்பட்டது. அன்பர் பலர் தரிசித்தும் சொற்பொழிவு கேட்டும் இன்புற்றனர்.

மகா கயிலாயக் காட்சி

தருமையாதீனம் 25 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் தரிசித்த மகா கயிலாயக்காட்சி - இருபத்திரண்டாவதுஆண்டு விழா அப்பர் கயிலைகண்டநாள் பொருந்திய ஆடி அமாவாசையன்று 30—7—1981 அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காலையிலும் மாலையிலும் ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் பூசைமடத்தில் திருக்கயிலாயத் திருவுருவப் படத்திற்கு வழிபாடு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களால் நிகழ்த்துவிக்கப் பெற்றது; பண்ணிசை வாணர்களால் திருமுறைப் பாராயணம் அகண்டபாராயணமாக நிகழ்த்தப்பெற்றது. மாலை 6 மணியளவில் பூசைமடத்தில் வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர், எம் ஏ. 'அப்பர் தேவாரத்தில் கயிலைக்காட்சி' பற்றியும் வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ. 'சுந்தரர்தேவாரத்தில்கயிலைக்காட்சி' பற்றியும் வித்துவான் சொ. முத்தையன், எம். ஏ. 'பெரியபுராணத்தில்

கயிலைக்காட்சி' பற்றியும் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் பி. லிட். ' திருக்கயிலாய ஞானஉலா ' ப்பற்றியும் விரிவுரையாற்றினர். இரவு வெள்ளிரதத்தில் திருக்கயிலாயத் திருவுருவப்படத் திருவீதியுலா நிகழ்வுற்றது. உலாவின்போது திருக்கயிலாய நிலையத்தில் தரிசன வழிபாடு பண்ணிசைவாணர்களின் திருமுறைப்பாராயணத்துடன் நிகழ்வுற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் அடியார்கள், சைவ மெய்யன்பர்கள் புடைசூழத் திருவுலாப்போந்தருளினர்கள். அன்பர்பலர் வந்திருந்து வழிபட்டுப் பயனடைந்தனர்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

இராமநாதபுரம்

இந்து ஒற்றுமை எழுச்சி மாநாட்டு விஜயம்

இஸ்லாமிய மதத்திற்கு ஒட்டுமொத்தமாக மக்கள் மதம் மாறிவரும் செயல்களைத்தடுத்து நிறுத்தவும் இந்துசமயங்களின் பெருமைகளை மக்கள் அறியவும்' இந்துமக்களிடம் ஒற்றுமை எழுச்சி உருவாகவும் இராமநாதபுரத்தில் கூட்டப்பெற்ற இந்து ஒற்றுமை எழுச்சி மாநாட்டிற்குத் தலைமைத்தாங்கத் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் 27–7—1981 திங்கட்கிழமை காலை 6 மணிக்குத் தருமையாதீனத்திலிருந்து திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களுடன் எழுந்தருளி காலை 11 மணி அளவில் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தை அடைந்தார்கள். குன்றக்குடி ஆதீனத்தில் பூரண கும்பமரியாதைகளுடன் வரவேற்கப்பட்டார்கள்.

பிற்பகல் 3 மணிக்கு தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களும் குன்றக்குடி ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களும் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளும் பரிவாரங்களுடன் இராமநாதபுரம் எழுந்தருளினர்கள். வழிநெடுகிலும் மக்கள் மலர்மாலைகள்சூட்டி வரவேற்க 4 மணி அளவில் தாயுமானவர் ஆலயத்திற்கு எழுந்தருளினர்கள். பேரூர் ஸ்ரீ சாந்தலிங்க அடிகளார் திருமடம் ஸ்ரீமத்சுவாமிகள் அவர்களும் கௌமாரமடம் ஸ்ரீமத் சுவாமிகள் அவர்களும் காஞ்சிபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் உடன் எழுந்தருளினர்கள். ஸ்ரீ தாயுமானவரை வழிபட்டு மாநாட்டுக்கு விஜயம்செய்த மகாசந்நிதானங்கள் மக்கள் வேண்டுகோளை ஏற்று ஊர் எல்லையினுள்ள ஹரிஜனச்சேரிக்கு விஜயம் செய்தார்கள். சேரிமக்கள் மட்டில்லா மகிழ்ச்சியுடன்

மகாசந்நிதானங்களைப் பாதபூசை செய்தும் மலர்மாலைகள் சூட்டியும் வரவேற்றனர்.

மாலை 4-30 மணி அளவில் மாநாட்டில் கலந்துகொண்டு மாலை நிகழ்ச்சிகளைத் தலைமையேற்று நிகழ்த்தியருளினர்கள். இரவு 8-30 மணி அளவில் இராமநாதபுரம் மன்னர் குடும்பத்தின் வேண்டுகோளை ஏற்று அரண்மனைக்கு எழுந்தருளி மன்னர்கள் வழிபடும் இராஜராஜேஸ்வரியைத் தரிசித்து அரசகுடும்பத்திற்கு ஆசியருளித் தாயுமானவர் ஆலயத்தையடைந்து இரவு 11 மணி அளவில் தருமைக்குத் திரும்பினர்கள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிகள் திருக்கோயிலில் சமயகுரவருள் மூன்றாமவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜைவிழா 7—8—81 அன்று சிறப்பாக நடைபெற்றது. காலை விசேஷ அபிஷேக ஆராதனைகளுக்குப் பின்னர் ஸ்ரீ சுந்தரர் அருள்வரலாற்றுத் தொடர்புடைய பெரிய புராணப்பகுதிகள் படிக்கப்பெற்றன. திருத்தொண்டத்தொகை பாராயணம் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள். இரவு ஸ்ரீ சுந்தரர் ஸ்ரீ சேரமான் பெருமாள் நாயனர் திருவீதியுலா நிகழ்வுற்றது. திருவீதியுலாவில் மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார், வித்துவான் திரு. வி சா குருசாமி தேசிகர், எம். ஏ. வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ. வித்துவான் திரு. சொ. முத்தையா தேசிகர் எம். ஏ. வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், பி லிட் ஆகியோர் அற்புத விளக்கச் சொற்பொழிவாற்றினர். வேதபாராயணத்துடனும் திருமுறைப் பாராயணத்துடனும் திருவீதியுலாச் சிறப்பாக நிகழ்வுற்றது. அன்பர்பலர்தரிசித்தும்சொற்பொழிவுகள்கேட்டும்பயனுற்றனர்

ஆடிப்பூரவிழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்திய நாத சுவாமி தேவஸ்தானத்திலும் சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்திலும், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்திலும் ஆடிப்பூர மகோற்சவம் நடைபெற்றது. 3—8-81 திங்கட்கிழமை ஆடிப்பூரநாள்விழா மிகச்சிறப்பான முறையில் நடைபெற்றது. அன்பர்பலர்வந்து தரிசித்து இன்புற்றனர்.

சம்வத்ஸராபிஷேகம்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருப்புள்ளிருக்கு வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில், சென்ற சௌமிய ஆண்டு ஆனித்திங்கள் 18 ஆம் நாள் (2—7—69) புதனன்று திருவோண நட்சத்திரத்தில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றதையொட்டி நிகழும் துன்மதி, ஆனி 7 ஆம் நாள் திருவோண நட்சத்திரத்தில் 2—6—81 அன்று வேதபாராயணம் திருமுறைப் பாராயணம் ருத்ரஜபம் முதலிய வற்றுடன் மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. அன்பர்பலர் கலந்துகொண்டுபயன்பெற்றனர்.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம்

திருத்துறையூர் (கிளை)

ஆடிப்பூரத்திருக்கோயில் வழிபாடும் ஸ்ரீ அருணந்தி சிவா சாரியார் குருமூர்த்த வழிபாடும் பணிமன்றச்சார்பில் 3—9—81 அன்று திருத்துறையூரில் சிறப்பானமுறையில் நடைபெற்றது. திருவாளர் ந. சண்முகசுந்தர தேசிகர் அவர்கள் சிவஞான போதம் பத்தாம் சூத்திரத்தினை விளக்கி விரிவுரையாற்றினர் அன்பர்பலர் வழிபாட்டில் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

மதுரை (கிளை)

பணிமன்றச் சார்பில் ஏழாவது திருமுறை வழிபாட்டுக் கூட்டம் திருவேடகம் திருக்கோயிலில் 19—7—81 நிகழ்த்தப் பெற்றது. காலை 10 மணியளவில் வையைநதிக்கரையிலிருந்து சிவபுராணம், கீர்த்தித்திருவகவல் பாராயணத்துடன் ஊர்வலம் நிகழ்வுற்றது திருக்கோயில் சந்நிதியில் தலப்பதிகள் — திருப் பாசுரப்பதிகம் பண்முறைப்படி, பாரயணம் செய்யப்பெற்றது. விசேஷ அருச்சனை வழிபாடுநிகழ்வுற்றது.

வழிபாட்டின் அங்கமாகத் திருமுறைப்பாடல் விளக்கக் கூட்டம் நிகழ்வுற்றது. திருக்கோயில் நிர்வாக அதிகாரி வரவேற்றுப் பேசினர் மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர், திரு. க வெள்ளைவாரணனர், மகாவித்துவான் திரு மு. சண்முகம்பிள்ளை ஆகியோர் விளக்கவுரை நிகழ்த்தினர். வழிபாடு முடிந்தபின்பு சோழவந்தான், கிண்ணிமடத்திற்கு அன்பர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். சிறப்பான மாகேசுவரபூஜை நிகழ்வுற்றது.

மாலை தென்கரைச்சிவாலய வழிபாடும் ஜனகமாரியம்மன் கோயில், ஜனகபெருமாள்கோயில் வழிபாடும் நிகழ்ந்தது. பெருமாள்கோயிலில் மாலை 7 மணியளவில் திரு. க. வெள்ளை வாரணனர் தலைமையில் மன்றக் கூட்டம் நிகழ்ந்தது. மன்றத்தின் நோக்கங்கள் —வழிபாடு— திருமுறை முற்ருேதல் இவற்றின் பயன்கள் ஆகியனபற்றித் திரு. தா. குருசாமிஓதுவார் விளக்கிப் பேசினர். மகாவித்துவான் திரு. ச. தண்டபாணிதேசிகர், திரு. க. வெள்ளைவாரணனர், மகாவித்துவான் திரு. மு. சண்முகம்பிள்ளை ஆகியோர் விரிவுரை ஆற்றினர். அன்பர்பலர் வழிபாட்டில் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம்

இத்திருக்கோயிலைத் தரிசிக்கும் வாய்ப்பு கிடைத்ததற்கு ஆண்டவனுக்குநன்றிதெரிவித்துக்கொள்கிறேன். திருக்கோயில் நல்லமுறையில் பராமரித்துவருவது மிக்க மகிழ்ச்சி.

(ஒ-ம்) **வ. ச. மாணிக்கவாசகம்.**

4—5—81 மாவட்ட வருவாய் அலுவலர் தஞ்சை

★

அருள்மிகு அபிராமியன்னையின் அருட்காட்சியினைக்கண்டு அகமகிழ்ந்தேன். இவ்அன்னையின் அருள் உலகை உய்விக்க அன்னையை இறைஞ்சுகிறேன்.

(ஒ-ம்) **எம். பி. நிர்மலா.**

4—5—81 கோட்டாட்சியர் மாயூரம்.

★

அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் மற்றும் அன்னை அபிராமியின் திவ்விய தரிசனம் கண்டு மெய்மறந்த பேருவகை பெற்றேன். நல்லமுறையில் திருக்கோயில் பராமரிக்கப்பட்டு வருவது குறித்து மனநிறைவுபெறுகிறேன். இறை அருள் பக்த கோடிகளை உய்விக்க இறைஞ்சுகிறேன்.

(ஒ-ம்) **வே. கதிர்வேல்.**

புதுவை மாநில கூட்டுறவுச் செய்தித்துறை
மற்றும் அறங்காவல்துறை அமைச்சர் புதுவை

உ

எதிர்காலம்

★

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(துன்மதிஞூ ஆவணிமீ 1உ முதல் 31உ முடிய

(17—8—81 முதல் 16—9—81 முடிய)

ஸ்ரீ துன்மதிஞூ ஆடிமீ 32உ பானுவாரம் சதய நக்ஷத்திரம் தைதுலைகரணம் கூடியகாலத்தில் சூரிய உதயம்முதல் 5உ நாழிகை 35 வினடிக்கு மிதுன லக்கினத்தில் ஸ்ரீலோகரட்சகரான சூரியபகவான் கடக ராசியிலிருந்து சிம்மராசி சங்கிரமணமாக ஆவணிமாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். ஆவணிமீ 1உ சோமவாரம் விஷ்ணுபதி புண்ணியகாலமாகும். சந்திரபகவான் சேனபதியாகிறார். சங்கிரமகால கிரகஸ்திதியின் பலனாவது லோகமெங்கும் மழை மிகுந்து ஜனங்கள் வியாதியின்றி க்ஷேம மாக இருப்பார்கள். ஜனங்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ப வேலை வாய்ப்புகள் தலைமைப்பதவிகள் ஏற்பட்டு முன்னேற்ற ஸ்திதியில் விளங்குவர்.

லோகத்தில் புண்ணிய சீலர்களால் சிவபுண்ணிய கைங்கரி யங்கள் தர்ம காரியங்கள் இறைவன் சித்தமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும். தேசங்களில் மன்னர்கள் ஜனாதிபதிகள் மந்திரிகள் இறைவன் கட்டளை நிறைவேற்றுபவர்களாகி நெறியாக இறைமை செலுத்துவர். துலாக்கோல் நிகர் இராஜ்ஜிய பரிபாலனம் நடத்தி, பிரஜைகளை இரட்சிப்பார்கள். பிரஜைகள் நாட்டுப்பற்று மிகுந்து சமுகநலம் பேணி சீரிய வாழ்க்கை நடத்துவர்.

உலகில்உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சொரூப ஞானபதிகளாகத் திகழ்கின்ற சிவராஜயோகத்தில் திருவீற்றுள்ள சிவஞான குருமகான்கள் லோகத்திற்கு அறவுரைகள்கூறிச் சிவ சமய உயர்வினை பிரஸ்தாபித்து அருளுவார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள்

சம்பிரதாயச் புனிதவழியில் நடைபெற்றுவரும். மக்கள் அனை வரும் தெய்வபக்தியுடையவர்களாகி க்ஷேமகரமாக வாழ் வார்கள்.

1. மேஷம் :- அசுவதி – பரணி – கார்த்திகை ¼
(சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. – அ.)

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் நிரந்தரபண வருமானங்கள் வரவாகிக் கொண்டிருக்கும். அரசாங்கத் தொடர்புள்ள விஷயங்களில் ஆகஸ்டு 26வ முதல் நல்லனஏற்படும். விவகாரத்தில் ஜெயம் தரும். எழுத்துமூல காரியங்களில் தஸ்தாவேஜுகளில் ஸ்லாக் கியம் ஏற்படும். இயந்திர சாதனங்கள் சீர்படும். தாரபுத்திரர் களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஆகஸ்டு 17, 20, 21, 25, 26, 31 செம்டம்பர் 1, 2, 3, 4, 10, 11, 12, 13 தேதிகளில் மிகுந்த நற்பலன்களை ஏற்படுத்தும். செப்டம்பர் 5, 6, தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ – உரோகிணி மிருகசீர்ஷம் ½
(இ. ஊ. ஏ. – ஒ. வ, வி. வூ - வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் சுபமானபலனைத்தரும். பண வருமானங்கள் கண்யம் மேலிடும்படி வந்துசேரும். ஆகஸ்டு 25வ முதல் சகோதரருக்கு நல்லன ஏற்படுத்தும். பந்துக்கள் வருகை உபசரணை சந்துஷ்டியாக இருத்தல் ஆகும். இல்லத்தில் சுபம் நடக்கும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம் ஏற்படுத்தும். தாரபுத்திரர்களுக்கு மகிழ்ச்சிதரும் நிலைமை உருவாகும். ஆகஸ்டு 17, 18, 19, 23, 24, 27, 28 செப்டம்பர் 3, 4, 5, 6, 7, 12, 13, 14. 15, 16 தேதிகளில் தனுதாயாதி நற்பலன் களையளிக்கும். செப்டம்பர் 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன்தரும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾
(கா. கி. - கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் சுப பலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் நல்ல பண வருமானங்களைஏற்படுத்தும். சகோ தரர் சகோதரிகளுக்கு நல்லன ஏற்படும். வாகனசுகம் திருப்தி யளிக்கும். வித்தியா வியாபாராதி கலைதுறைகளில் ஆகஸ்டு 26வ முதல் விசேஷபலன்தரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஆகஸ்டு 18. 19, 20, 21, 25. 26, 29, 30 செப்டம்பர் 5. 6, 7, 8, 9, 14, 15, 16 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். செப்டம்பர் 10, 11 தேதிகள் சந்திராஷ் டமம். மற்றதேதிகளில் மத்திமபலன்தரும்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

(ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. – டி. டு. டோ.)

கடகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பண வருமானங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தும். அரசாங்கம் அல்லது தக்கவர்களிடமிருந்து நல்லூக்கச்செய்தி வரும். ஞானமார்க்கம் அல்லது இரசாயன ஆராய்ச்சியில் அதிககவனம் ஆகும். சிலசமயங்களில் ஆயாசம் ஏற்படும். ஸ்ரீ துர்க்காம்பிகைக்கு அருச்சனை செய்தால் நலம். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஆகஸ்டு 20, 21, 22, 23, 24, 27, 28, 31 செப்டம்பர் 1, 2, 8, 9, 10, 11 தேதிகளில் தனாதாயாதி நற்பலன்களையளிக்கும். ஆகஸ்டு 17, செப்டம்பர் 12, 13, 14 தேதிகள்சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

5. சிம்மம், - மகம் – பூரம் – உத்திரம் ¼

(ம. மி. மு. மே. – மோ. ட. டி. டு. – டே.

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் நல்ல பணவருமானங்கள் வந்துகொண்டிரு இருக்கும். ஆகஸ்டு 26உ ஆனல் இல்லத்தில் நல்லகாரியம் நடக்கும். பொன் மணி பூஷணம் தரும். புத்திரர் புத்திரிகளுக்கு நல்ல நிலைமையை ஏற்படுத்தும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும். ஆகஸ்டு 17, 23, 24, 25, 29, 30 செப்டம்பர் 3, 4, 10, 11, 12, 13 தேதிகளில் தனாதாயம் மகிழ்ச்சி ஆகிய நற்பலன்களை யளிக்கும். ஆகஸ்டு 18, 19 செப்டம்பர் 15, 16 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன்தரும்.

6. கன்னி :- உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

(டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பத்தில் பண வருமானங்கள் வெகுவாக வரும். அவசிய மானவற்றில் செலவும் ஆகும். வீடுவாகனங்களில் நவீனம் ஏற்படும். மாதக்கடைசியில் நல்லவர் புதிய மனிதர் சந்திப்பு சந்துஷ்டி ஏற்படுதல் ஆகும். தாரபுத்திரர்களுக்கு சௌக்கிய பலன்தரும். ஆகஸ்டுமீ 17, 18, 19, 24, 25, 26, 27, 28, 31 செப்டம்பர் 1, 5, 6, 7, 12, 13, 14, 15, 16 தேதிகளில் தனாதாயம் மிகுந்த சௌகரியம் தரும். ஆகஸ்டு 20, 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾
(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் சுபமானபலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் தன வருமானம் வெகுவாக வரும். பூமி இயந்திரங் களில் ஆகஸ்டு 27உ முதல் செலவுடன் விருத்தி நிலைமையை ஏற்படுத்தும். வித்துவத்துவம் கலைதுறைகளில் பிரசித்தம் ஏற்படும். செப்டம்பர் 13உ க்கு வாகனபிராப்தி ஒன்று ஏற்படும். ஆகஸ்டு 18, 19, 20, 21, 22, 27, 28, 29, 30 செப்டம்பர் 3. 4, 8, 9, 15, 16, தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். ஆகஸ்டு 23, 24, தேதிகளில் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.
(தோ. - ந. நி. நு. நே. - ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் பண வருமானம் மூன்று விதங்களில் வந்துசேரும். எழுத்துமூலத்தில் அரசாங்கத்தினிடமிருந்து நன்மைகள் ஏற்பட்டுவரும். எல்லாக்காரியங்களும் வெற்றி கரமாகநடந்து கொண்டிருக்கும். வீடு வாகனபிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஆகஸ்டு 20, 21, 22, 23, 29, 30, 31 செப்டம்பர் 1, 5, 6, 7, 10, 11 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். ஆகஸ்டு 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼
(யே. யோ பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுகநடக்கும். குடும்பாபி விருத்தியில் தனவருமானம் வந்துகொண்டிருக்கும். இராசிக்கு ஓர் விபத்துவந்து தப்பும். சகோதரருக்கு எதிர்ப்பாளராய் சிறு சங்கடம் வந்து நீங்கும். வித்தியா வியாபாராதிகலை துறைகளில் ஆகஸ்டு 26உ ஆனல் மேன்மைஸ்திதியளிக்கும். வீடு வாகன பிராப்தியில் நல்லனஏற்படும். ஸ்ரீ துர்க்காம்பிகைக்கு அருச்சனை செய்வதால் குடும்பத்திற்கு சுபிட்சம் ஏற்படும். தாரபுத்திரர் களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஆகஸ்டு 17, 23, 24, 25, 26, 31 செப்டம்பர் 1, 2, 3, 4, 8, 9, 12, 13 தேதிகளில் நற்பலன்களையளிக்கும். ஆகஸ்டு 27, 28 தேதிகள் சந்திராஷ்ட மம். மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

10. மகரம் :- உத்திராடம் ¾ – திருவோணம் - அவிட்டம் ½
(போ. ஜ. ஜி. – கி. கு. கே. கோ. – கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானம் கண்யஸ்திதிக்கு ஏற்ப வந்து கொண்டிருக்கும். ஆகஸ்டு 26உ க்குமேல் புத்திரர் அல்லது புத்திரிக்கு சுபம் ஏற்படும். வீடு வாகன பிராப்தியில் சீர்திருத்தம் ஏற்படும். பாக்கியம் பெருகும். ஆகஸ்டு 18, 19, 25, 26, 27, 28 செப்டம்பர் 3, 4, 5, 6, 7, 10, 11, 15, 16 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். ஆகஸ்டு 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

11. கும்பம் :- அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾
(கு. கே, – கோ. ஸ. ஸி. ஸு. – ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பண வருமானம் தக்கசமயத்துக்கு வந்துசேரும். மனதுக்குத்தைரியம் ஏற்படும். வீடு வாகனபிராப்தியில் நல்லன ஏற்படும். இது வரையில் தயக்கமாக இருந்தகாரியங்கள் எளிதில் நிறைவேறும். புத்திரனுக்கு ஆகஸ்டு 26உ ஆனுல்ஓர்உயர்வுதரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஆகஸ்டு 17, 20, 21, 22, 28, 29, 30 செப்டம்பர் 5, 6, 7, 8, 9, 12, 13 தேதிகளில் தனுதாயாதிநற்பலன் களையளிக்கும். ஆகஸ்டு 31 செப்டம்பர் 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.
(தி. – து. ஸ. ச. த. – தே. தோ ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பண வருமானங்கள் கண்ணியஸ்திதிக்கு ஏற்பவந்துகொண்டிருக்கும். பூமி பிராப்தியில் சாதாரணபலனுக இருந்துவரும். வீடு வாகனங்களில் மாதக்கடைசியில் சீர்திருத்தம் ஆகும். வித்துவத்துவத்தில் அரசாங்க நன்மையை ஏற்படுத்தும். புத்திரர் புத்திரிகளால் உள்ள கவலை நீங்கும். ஸ்ரீ துர்க்காம்பிகைக்கு அருச்சனை செய்தால் நலம். மனைவிக்கு ஆரோக்கியம் தரும். ஆகஸ்டு 18, 19, 22, 23, 24, 29, 30, 31 செப்டம்பர் 1, 2, 8, 9, 10, 11, 15 16 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். செப்டம்பர் 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

———

மதிப்புரை

ஸ்ரீ திருமகள் அந்தாதி

ஆசிரியர் :- ஸ்ரீ சுத்தசத்வானந்தா, 14. சிங்காரி நாயக்கன் தெரு, மயிலாப்பூர், சென்னை 600 004.

படிப்பவர் மனத்தை ஒருவழிப்படுத்தி, தெய்வத்திருவருளைப் பெற இணைப்புப்பாலமாக அமைவனதோத்திரநூல்கள். கனிந்த உள்ளத்திலிருந்து எழுந்த கவிதையாதலின் அவை மக்கள் தம் நிலையிலிருந்து உயரத் துணைசெய்வன. அவ்வகையில் சேர்த்து எண்ணத்தக்கது இந்தநூல். காப்பும் நூற்பயனும் சேர்த்து நூற்றிரண்டு செய்யுட்களால் ஆனது. திருமகள்மீது பாடப் பெற்றது. பலதோத்திர நூல்களை ஆக்கிய அனுபவ முதிர்வால் எழுந்த நூலாதலின் முன்னோர் மொழிபொருளும், சொற்றொடர் களும் ஆங்காங்கு அமைந்து சுவையூட்டுகின்றன. எடுத்துக் காட்டாக இந்நூலிலுள்ள 28, 44, 91 ஆம் பாடல்கள் அபிராமி அந்தாதியிலுள்ள பாடல்களை எண்ணச்செய்கின்றன. அனை வரும் படிக்க வேண்டிய நூல் இது. ஆசிரியர் இயற்றிய சில கீர்த்தனைப் பாடல்களும், திருமயிலை ஸ்ரீ மயூரவல்லித்தாயார் தோத்திரப்பாடல்களும் இந்நூலில் சேர்க்கப்பெற்றுள்ளன. விலை ரூ 1-25. நூல்வேண்டுவோர் ஆசிரியருக்கு எழுதிப்பெறுக.

பெரியபுராண சார வெண்பா

ஆசிரியர் : வல்லி. ப. தெய்வநாயக முதலியார், பதிப்பாளர்; பேராசிரியர் சேக்கிழார்தாசன். வெளியிடுவோர் : திரு S. S. முதலியார் F. I. B. A.

திருத்தொண்டர்திருவந்தாதி, திருத்தொண்டர் புராணசாரம் போலப் பெரிய புராணத்துள் பேசப்பெறும் நாயன்மார்கள் வரலாறுகளைச் சுருக்கமாகக்கூறுவது. எண்பத்தாறு வெண்பாக் களால் இயன்றது. 1965ல் அச்சிடப்பெற்ற இந்நூல், இப்போது இவ்வாண்டு தொண்டர்சீர்பரவும் சேக்கிழார் வைகாசிப்பூசப் பெருவிழாமலராகத் திருநாகேச்சுரம் சேக்கிழார்மன்றத்தலைவர் பொருளுதவியால் வெளிவந்துள்ளது. செல்வம்பெற்ற செம் மனச்செல்வர் செய்யும்பணிக்கு இப்பதிப்பு ஓர்எடுத்துக்காட்டு, இதன் விலை ரூ 0-75 காசு. வேண்டுவோர் 'சேக்கிழார்மன்றம்' திருநாகேச்சரம் 612 204, கும்பகோணம்வழி, தஞ்சைமாவட்டம். என்ற முகவரிக்கு எழுதிப்பெறலாம்.

ஆவணி மாதச் சிறப்புநாட்கள்

17—8—81 திங்கள், விஷ்ணுபதி புண்யகாலம். திருவையாறு தீர்த்தம்.

18—8—81 செவ்வாய், சங்கடஹரசதுர்த்தி.

22—8—81 சனி, வேளூர் கிருத்திகை, தருமை ஸ்ரீ சண்முகர் கிருத்திகை அபிஷேகம், கிருத்திகைவிரதம். காளாஷ்டமி, கோகு லாஷ்டமி, ஸ்ரீஜயந்தி.

23—8—81 ஞாயிறு, தருமையாதீனம் 14 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கந்தப்ப தேசிக சுவாமிகள் குருபூஜை.

24—8—81 திங்கள், மாயூரம் - குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி சம்வத்ஸராபிஷேகம், திருவலஞ்சுழி ஸ்ரீ சுவேதவிநாயகர் உற்சவாரம்பம்.

25—8—81 செவ்வாய், தருமையாதீனம் 13ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் குருபூஜை.

26—8—81 புதன், திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவர சுவாமி சம்வத்ஸராபிஷேகம்.

27—8—81 வியாழன், பிரதோஷம். மாதசிவராத்திரி. ஆவணி உற்ச ஆரம்பம் 26-58.

28—8—81 வெள்ளி, ஆயில்ய விழா.

29—8—81 சனி. சர்வ அமாவாசை. தர்ப்பசங்கிரகணம்.

30—8—81 ஞாயிறு, ஆவணி உற்ச நிவிருத்தி 44-19.

31—8—81 திங்கள், ஸ்ரீ மறைஞானசம்பந்தர், தருமையாதீனம் 5 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் குருபூஜைகள்.

1—9—81 செவ்வாய், ஸாமோபாகர்மா.

2—9—81 புதன், விநாயகசதுர்த்தி. ஆவணிமூல உற்சவ ஆரம்பம்.

3—9—81 வியாழன், ரிஷிபஞ்சமி.

6—9—81 ஞாயிறு, தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கும், ஸ்ரீதருமபுரீசுவரசுவாமிக்கும் சம்வத்ஸராபிஷேகம். தருமை ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழா முதல்நாள்.

7—9—81 திங்கள், தருமையாதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழா இரண்டாம்நாள். வேளூர் கேதாரவிரதாரம்பம்.

8—9—81 செவ்வாய், ஆவணிமூலம். தருமையாதீன பூஜைமடத்தில் விசேஷ அபிஷேக ஆராதனை. மாலை பட்டமளிப்பு விழா. தருமையாதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழா நிறைவு நாள். வேளூரில் ஸ்ரீ பஞ்சமூர்த்திகள் அபிஷேகம். புறப்பாடு. திருவையாறு சூரியபுஷ்கரணியில் தீர்த்தம். டு சூரியபுஷ்கரணியில் தெப்பம்.

11—9—81 வெள்ளி, ஆவணிமூல உற்சவ பூர்த்தி. பிரதோஷம். ஓணம் பண்டிகை.

12—9—81 சனி, ஸ்ரீ நடராஜர் அபிஷேகம்.

13—9—81 ஞாயிறு, பௌர்ணமிவிரதபூஜை. மாதபூஜையில் சர்க்கரை அபிஷேகம்.

14—9—81 திங்கள், மகாளயபட்சாரம்பம்.

15—9—81 செவ்வாய், திருக்கடவூர் ஸ்ரீ முனிசுவரபூஜை.

16—9—81 புதன், திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி சம்வத்ஸரா அபிஷேகம். கன்யா ரவி 54-45.

மதிப்புரை

திருஞானசம்பந்தர் – ஓர் ஆய்வு

சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவத்துறை வெளியீடு

ஆசிரியர் :- டாக்டர் திரு. வை. இரத்தினசபாபதி அவர்கள், (வித்துவான்; பி. ஓ. எல்., எம். ஏ., பி. எச்டி.) துணைப்பேராசிரியர், டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம், பல்கலைக் கழகம், சென்னை. பொதுப்பதிப்பாசிரியர் :- பேராசிரியர் டாக்டர் திரு. இரா. பாலசுப்பிரமணியன் அவர்கள். பக்கங்கள் 248. விலை ரூ. 16.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் தத்துவத்துறை சிறந்த சமய தத்துவ ஆய்வு நூல்களை வழங்கிவருகிறது. இத்துறையின் வெளியீடாக அண்மையில் வெளிவந்த திருஞானசம்பந்தர் ஓர் ஆய்வு என்ற நூலின் முதற்பகுதி தமிழிலக்கிய உலகிற்கு நல்விருந்தாக அமைந்துள்ளது. இதுவரை வெளிவந்துள்ள திருஞானசம்பந்தர் வரலாற்று ஆய்வு நூல்கள் திருப்பதிகங்களின் கருத்துரை நூல்கள் முதலியவற்றை ஆராய்ந்து ஞானசம்பந்தரின் அருள்வாழ்வையும் வாக்கையும் தெளிவுசெய்து புதிய கண்ணோட்டத்தோடு இந்நூலை எழுதியுள்ளார் ஆசிரியர். திருத்தொண்டர்புராணம் திருஞானசம்பந்தர் தேவாரம் பிற அருளாளர் பாடிய தோத்திரங்களின் தொடர்களைத் தம் எழுத்து நடையாகக்கொண்டு பக்தியுணர்வோடும் இலக்கியச் சுவையோடும் மக்கள் வாழ்வியல் கண்ணோட்டத்தோடும் இந்நூலைப் படைத்துள்ள ஆசிரியர் டாக்டர் திரு. வை. இரத்தினசபாபதி அவர்கள் பன்னிரு திருமுறைகள் பதினான்கு சாத்திரங்கள் பிற அருள் நூல்கள் முதலியவற்றைத் தத்துவ உணர்வோடும் கற்றறிந்தவர். சமய நிலையங்களைச் சார்ந்தும் கடவுள்பற்றோடு வாழ்க்கை நடத்தியும் வருபவர். குன்றக்குடி மயிலம், பேரூர்த்திருமடங்களோடு அருளியல் தொடர்புடையவர். தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களால் 'சித்தாந்தக் கலைஞர்' என்ற பட்டமளித்துப் பாராட்டப்பெற்றவர். பல்கலைக் கழகம் இவர்கள் வாயிலாகத் தொடர்ந்து சைவ சமயாசாரியர்கள் பிறதிருமுறை ஆசிரியர்களின் வாழ்வையும் வாக்கையும் ஆய்வுக் கண்ணோட்டத்தோடு வெளியிட்டுத் தமிழுக்கு ஆக்கம் அளிப்பது அரிய பணியாகும்.

இந்நூல் கிடைக்குமிடம் :- நூல்வெளியீட்டுத்துறை பல்கலைக் கழகம் சென்னை 5.

வி. சா. குருசாமி தேசிகர்

Printed & Published by V. Ramaiah Pillai. Manager, Dharmapuram
... Dharmapuram, Mayuram. 10-8-81